வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk
மலர் : 04
08.03.2023 புதன்கிழமை
இதழ் : 89
பக்கங்கள் : 16




# ஏப்ரல் 25 உள்ளூராட்சி தேர்தல்

## அறிவித்தது தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 08

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு எதிர் வரும் ஏப்ரல் 25ஆம் திகதி பொருத்தமான தினம் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்துடன், தேர்தல் தொடர்பான அறிவித்தலை வெளியிடுவதற்கு மாவட்ட தேர்தல் அதிகாரிக ளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த மார்ச் 9ஆம் திகதி

16

# இலங்கைக்கு கடன் பிணை; ஐ.எம்.எவ்வின் முடிவு 20இல்!

நியூயோர்க், மார்ச் 08

இலங்கைக்கு கடன் வழங்குவதற்காக எட்டப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் நிலை ஒப்பந்தத்துக்கான ஒப்புதலை பரிசீலிக்க ஐ. எம். எவ்வின் சபை வரும் 20ஆம் திகதி கூடுகின்றது.

அனைத்து கடன் வழங் குநர்களிடமிருந்தும் கடன் மறுசீரமைப்புக் கான உத்தரவாதங்களுக் கான உறுதிமொழியை இலங்கை பெற்றுள்ளது. இதையடுத்தே, பிணை எடுப்புக்கான ஒப்புதல் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் சபை பரிசீலிக்கவுள்ளது.

இது தொடர்

16

# கணவர், மனைவி, 2 பிள்ளைகள் வீட்டில் இருந்து சடலமாக மீட்பு!

## வவுனியா குட்செட் வீதியில் அதிர்ச்சி சம்பவம்!!

வவுனியா, மார்ச் 08

வவுனியா குட்செட் வீதி,உள்ளக வீதியில் அமைந்துள்ள வீடொன் றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரின் சடலங்கள் பொலிஸா ரால் நேற்று மீட்கப்பட் டமை பெரும் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள் ளது.

நேற்று குறித்த வீட் டின் உரிமையாளருக்கு அவரது நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். எனி னும் அவர் பதிலளிக்க வில்லை. இதனையடுத்து அவரது வீட்டுக்குச் சென் றுள்ளார்.

இதன்போது குறித்த வீட்டினுள் குடும்பஸ்தர் அவரது இரு பிள்ளைகள், மனைவி ஆகியோர் மர்ம மான முறையில் உயிரிழந்து கிடந்த மையை கண்டு அதிர்ச்சி யடைந்தார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டது. சம்பவ இடத்துக்குச்

16

# நாணய நிதியத்தின் கடன் இம்மாத இறுதியில் கிட்டும்!

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை



கொழும்பு, மார்ச் 08

இந்த மாதத்தின் 3 அல்லது 4 ஆவது வாரத் தில் சர்வதேச நாணய நிதி யத்திடமிருந்து 290 கோடி டொலர் நிதி கிடைக்கப் பெறும் என்று ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள் ளார்.

தற்போதைய பொரு ளாதாரம் மற்றும் சர்வ தேச நாணய நிதியத்துட னான பேச்சின் முன்னேற் றம் தொடர்பில் பாராளுமன்றில் நேற்று அவர் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனாவின் கடன் மறு சீரமைப்புக்கான எழுத்து மூல உத்தரவாதம் நேற்றிரவு (நேற்று முன்தினம் இரவு)

16

# பல்கலை மாணவரின் போராட்டம் கலைப்பு!



கொழும்பு, மார்ச் 08

அனைத்து பல்கலைக் கழக மாணவர்களின் போராட்டத்தை பொலி ஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியதுடன், தண்ணீர் தாரைப் பிரயோ கமும் செய்து கலைத்த னர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண் டும், பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்க வேண் டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தினர் நடத்திய

16

# பெண்ணுக்கு எமனானது ஆட்டிறைச்சி!

தென்மராட்சி, மார்ச் 08

ஆட்டிறைச்சியின் எலும்பு மார்பு குருதிக் குழாயில் சிக்கியதால் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

தென்மராட்சி - மட்டு வில் தெற்கை சேர்ந்த லோகேந்திரகுமார் மேரி ஜெனிஸ்ரா (வயது- 46) என்ற இரு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயி ரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்ப வம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குறித்த பெண், கடந்த 25ஆம்

16

# நாளை முதல் ஒரு வாரகாலம் தொடர் பணிப்புறக்கணிப்பு!

## 40 தொழில்சங்கங்களின் கூட்டமைப்பு

கொழும்பு, மார்ச் 08

அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு எதிராக நாளை வியாழக்கிழமை முதல் ஒரு வாரம் தொடர்ச்சியாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட வுள்ளதாக 40 தொழில் சங்கங்களின் கூட்ட மைப்பு அறிவித்துள்ளது.

நாளை வியாழக் கிழமை ஆரம்பமாகும் இந்தப் போராட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை வரை தொழிற்சங்க நடவடிக் கையில் ஈடுபடவுள்ள தாக தொழில்வல்லுநர் களின் தொழில்சங்க கூட் டமைப்பு அறிவித்துள் ளது.

கொழும்பில் அரச மருத்துவ அதி காரிகளின் சங்கப்

16

# மாடுகளுக்கு அம்மை; யாழிலும் பரவுகிறது!

## எட்டு மாடுகள் இறப்பு

வடமராட்சி, மார்ச் 07

வடமராட்சி கிழக்கு பகுதியிலும் மாடுகளுக்கு அம்மை நோய் தொற்றி யிருப்பது இனங்காணப் பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு - கொட்டோடை பகுதி யில் பல மாடுகளில் அம்மை நோய் பரவுவது நேற்று புதன் கிழமை

16

# தேர்தல் ஆணைக்குழுவுடனான சந்திப்பு திட்டமிட்டு தவிர்ப்பு!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 08

நிதி அமைச்சின் செய லாளர் தேசிய பாதுகாப்பு பேரவை கூட்டத்தில் கலந்துகொள்ள வேண் டும் என தெரிவித்திருப் பது, தேர்தல் ஆணைக் குழுவுடன் கலந்துரை யாடுவதை தடுப்பதற் காகும். ஜனாதிபதி சபை யில் இருக்கும் போது எவ்வாறு தேசிய பாது காப்பு பேரவை இடம்பெற முடி

16

# அரச நிறுவனங்களை விற்று 450 கோடி டொலர் திரட்ட முடிவு?

கொழும்பு, மார்ச் 08

இலாபம் தரும் மற் றும் நட்டத்தை ஏற்படுத் தும் அரச நிறுவனங் களை விற்பதன் மூலம் 450 கோடி டொலர்களை திரட்டுவதற்கு அரசு எதிர் பார்ப்பதாகத் தெரிய வரு கின்றது. அரசின் மூத்த இரு அதிகாரிகளே இந் தத் தகவலைத் தெரி வித்தனர்.

சிறீ லங்கா ரெலி கொம், லிட்ரோ எரிவாயு நிறுவனம், ஹில்டன் ஹோட்டல், சிறீ லங்கா கட்டரிங் உள்ளிட்ட 14 அரச

16

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் இலங்கைக்கு வருகை தந்தமை இன்றுவரை தொடர்ந்து சர்ச்சைக்கு உரியதாகவே இருந்து கொண்டிருக்கின்றது.

இலங்கைக்கு கிடைக்கப் பெறும் சகல புலனாய்வு தகவல்களையும், அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் 'புலனாய்வு தகவல் பரிமாற்றல் மத்திய நிலையம்' ஒன்றை ஸ்தாபித்தல் உள்ளிட்ட நான்கு கடும் நிபந்தனைகளை அமெரிக்காவின் சி. ஐ. ஏ. பிரதானி வில்லியம் பேர்ன் ஜனாதிபதியிடம் முன் வைத்துள்ளார் என்று சாடியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.

அவர்களைப் பொறுத்தவரை அமெரிக்கா என்பது எப் போதுமே தீண்டத்தகாத ஒரு நாடுதான். அதே நாடு புலிகளை அழிப்பதற்கு உதவியபோது இனிப்பாக இருந்தது. ஆனால், அதற்குப் பின்னர் வேண்டத்தகாத நாடுதான்.

அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் வருகை தந்தபோது, அவர்களை சந்திக்க நமது நாட்டு உளவுத்துறை பிரதானி சென்ற போது, அவரிடமிருந்த ஆயுதங்கள் களையப்பட்டே சந்திப்புக்கு அனுமதிக்கப்பட்டார் என்றும் இவர்கள் தொடர்ந்து குற்றஞ் சாட்டிவருகின்றனர்.

புலனாய்வு தகவல்களை பரஸ்பரம் பகிர்ந்துகொள்வது என்பது எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை ஆய்வு செய்வது எமது இந்தப் பத்தியின் நோக்கமல்ல.

ஆனால், அமெரிக்க புலனாய்வு தகவல் ஒன்று தெரிவித்திருக்கும் செய்தி ஒன்றே நமது கவனத்தை பெற்றது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் பணத்தை எடுத்து வர அதிகாரிகள் அக்கறை காட்டவில்லை என்று அமெரிக்க புலனாய்வு நிறுவனம் ஒன்று அண்மையில் தெரிவித்திருக்கின்றது.

இலங்கையின் ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட பெருந் தொகை - மூவாயிரத்து அறுநூறு மில்லியன் டொலர்கள் (முப்பத்தியாறு பில்லியன் டொலர்கள்) வெளிநாட்டு வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு ஏற்றுமதி வர்த்தகத்தை ஆராயும் அமெரிக்காவின் புலனாய்வு நிறுவனமான Global Finance Integrity Institute தெரிவித்துள்ளது.

அதாவது, இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக வெளிநாடுகளில் கிடைத்த பணத்தை ஏற்றுமதியாளர்கள் வெளிநாடுகளிலேயே வைத்திருக்கின்றனராம்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இரண்டு பில்லியன் டொலர்கள் கடனாகப் பெறுவதற்காக பல மாதங்களாக நமது அதிகாரிகள் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இலங்கைக்கு வரவேண்டிய அந்நியச் செலாவணி - முப்பத்தியாறு பில்லியன் டொலர்கள் வெளிநாடுகளில் வைக்கப்பட்டிருக்கின்றன என்பது மாத்திரமல்ல, அது தொடர்பான தகவல்கள் கிடைத்தும் அதனை நாட்டுக்குள் எடுத்துவருவதற்கு அதிகாரிகள் அக்கறை காட்டவில்லை என்கின்றது அமெரிக்க புலனாய்வு நிறுவனம்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான தகவல்கள் கிடைத்தும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று இன்றுவரை கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும் நாம், அதேபோல இப்படியொரு தகவல் கிடைத்தும் அதற்குரிய நடவடிக்கை எடுக்காமல் இருப்பது என்பதும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவைதான்.

இந்தப் பணத்தை இலங்கைக்கு எடுத்து வருவதற்கு மத்திய வங்கியோ அல்லது அதிகாரிகளோ இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானம் மற்றும் அவை வைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை குறித்து அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

எனினும், இலங்கை சுங்கத் திணைக்களம், ஏற்றுமதி ஆவணங்கள் மற்றும் வெளிநாடுகளின் இறக்குமதி ஆவணங்கள் ஆகிய வற்றின் விரிவான பகுப்பாய்வுகளின் பின்னரே இது கண்டறியப்பட்டது என்று தெரிவித்திருக்கின்றது.

முப்பத்தியாறு பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பது, இலங்கையின் பொருளாதாரத்தில் மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமாகும். இலங்கை தற்போது சுமார் எண்பத்தியொரு பில்லியன் டொலர் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது.

இருப்பினும், ஏற்றுமதியாளர்கள் இலங்கைக்கு பணத்தை எடுத்து வருவதை தவிர்ப்பதற்கான காரணங்கள் என்னவெனில், ஏற்றுமதி மூலம் கிடைக்கும் அனைத்து வெளிநாட்டு பணத்தையும் இலங்கைக்கு அனுப்பும் போது, தற்போதுள்ள சட்டத்தின் படி, அந்த டொலர்கள் இலங்கை ரூபாயாக மாற்றப்பட வேண்டும்.

அந்நியச் செலாவணியை ரூபாயாக மாற்றிய பின்னர் மீண்டும் மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலாவணியைப் பெற முடியாது என்ற சந்தேகம் காரணமாகவே ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டு நிதியை வெளிநாட்டு வங்கிகளில் வைத்திருக்கின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இவை எல்லாவற்றையும் பார்க்கின்றபோது, நமது நாடு திருந்துவதற்கு சந்தர்ப்பம் இருக்கும் என்று நம்புவதற்கு இடமே இல்லைப்போலும்.!

**- ஊர்க்குருவி**

## பல இலட்சம் ரூபாயை தொலைபேசி அழைப்பு மூலமாக சுருட்டியவர் கைது!

*யாழ்ப்பாணம், மார்ச் 08*

தொலைபேசி மூலம் அழைப்பு ஏற்படுத்தி மக்களை ஏமாற்றி இலட்சக் கணக்கான ரூபாய் ஏமாற்றியவரை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளனர்.

களுத்துறை - பண்டாரகம - அட்டுளுகமவை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

"உங்களுக்கு அதிர்ஷ்டம் - பரிசுப் பொருள் கிடைத்துள்ளது", என்று தொலைபேசி மூலம் அழைத்து மக்களை ஏமாற்றி இலட்சக் கணக்கான ரூபாய்களை ஏமாற்றியுள்ளார்.

யாழ். மாவட்டத்தை சேர்ந்த நபர் ஒருவருக்கு அதிர்ஷ்டத்தில் கார் ஒன்று கிடைத்துள்ளதாக ஈஇசற் கேஸ் மூலமாக 24 இலட்சம் ரூபாயை மோசடி செய்திருப்பது கைபேசி உரையாடல் மூலமாகக் கிடைத்துள்ளது.

இதேபோன்று, பெரிய மற்றும் சிறிய தொகைகளை வடக்கில் பல்வேறு இடங்களிலும் இந்த நபர் ஏமாற்றிப் பெற்றுள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதேசமயம், இவ்வாறான மோசடிக் கும்பலிடம் அகப்பட்டு ஏமாறாமல் விழிப்புடன் இருக்குமாறும், அவ்வாறான தொடர்புகள் கிடைக்கும் போது சாதுரியமாக செயல்பட்டு உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு தெரிவிப்பது இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை இனங்காண உதவும் என்று யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ-03)

## நகை திருட்டில் கைதான இருவருக்கு விளக்கமறியல்!

*யாழ்ப்பாணம், மார்ச் 08*

9 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐந்தரைப் பவுண் தங்க நகையை திருடிய பெண் உட்பட இருவரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இளவாலை - நுணசை சிவன் கோவில் திருவிழாவில் நேற்று முன்தினம் சங்கிலி அறுக்கப்பட்டது.

முச்சக்கர வண்டியில் வந்த மூவர் கொண்ட குழு இந்தக் கைவரிசையை காட்டியது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதனடிப்படையில், விசாரணையில் ஈடுபட்ட இளவாலை பொலிஸார் பெண் உட்பட இருவரை கைது செய்தனர். மற்றொரு பெண் தலைமறைவானார். கைதான இருவரும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் என அறிய முடிகிறது. இதன்போது திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். இதன்போதே அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ)

## நெருக்கடியில் உதவும் நட்பு நாடுகளை பெற்றமை இலங்கையின் அதிர்ஷ்டம்!

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

*கொழும்பு, மார்ச் 08*

மிகவும் நெருக்கடியான தருணத்தில் உள்ளபோது அக்கறையுடன் உதவும் நட்புநாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பது இலங்கையின் அதிர்ஷ்டம் என்று குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தற்போதைய சூழ்நிலையில் அவசியமான அனைத்து உத்தரவாதங்களுடனும் முன்னோக்கிப் பயணிப்பது சிறந்ததாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்கான நிதியியல் உத்தரவாதத்தை முதலாவதாக இந்தியாவும் அதனைத்தொடர்ந்து பாரிஸ் கிளப் உறுப்புநாடுகளும் வழங்கியிருந்தன.

இருப்பினும், இலங்கையின் மிகப்பெரிய இரு தரப்புக் கடன்வழங்குநரான சீனா உரியவாறான உத்தரவாதத்தை வழங்குவதில் தொடர்ந்தும் தாமதம் காண்பித்துவந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த வாரம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துவெளியிட்ட சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங், இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற அவசியமான முழுமையான ஒத்துழைப்பை வழங்கத்தயாராக இருப்பதாக உத்தரவாதமளித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று செவ்வாய்கிழமை தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, "தற்போதைய கடினமான சூழ்நிலையில் அக்கறையுடன் உதவக்கூடிய நட்புநாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பது இலங்கையின் அதிர்ஷ்டமாகும். அவசியமான அனைத்து உத்தரவாதங்களும் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், நாம் அடுத்தகட்டத்தை நோக்கிப் பயணிக்கத் தயாராக இருக்கின்றோம்" என்று தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி கடின உழைப்பு, விடாமுயற்சி மற்றும் பொறுமை ஆகியவற்றின் மூலம் எம்மால் மாற்றத்தை ஏற்படுத்தமுடியும் என்றும், "இலங்கையினால் முடியும்" என்றும் அமைச்சர் அலி சப்ரி பதிவிட்டுள்ளார். (ஐ)

## தோணி கவிழ்ந்து குடும்பஸ்தர் பலி!

*மட்டக்களப்பு, மார்ச் 08*

ஆற்றில் இறால் பிடிப்பதற்காக தோணியில் சென்றவர் அது கவிழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை - அரசடித்தீவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இதில், அதே இடத்தை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கந்தப்பர் வெள்ளத்தம்பி என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், வழக்கம் போன்று இறால் பிடிப்பதற்காக தோணியில் சென்றிருந்தார். காற்றின் திடீர் அதிகரிப்பால் அவரின் தோணி கவிழ்ந்து அவர் ஆற்றில் மூழ்கினார். எனினும், அருகில் நின்றவர்கள் அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், அவர் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
08.03.2023 புதன்கிழமை
பிலவ வருடம், மாசி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இது என்ன வகையான ஜனநாயகம்?

உள்ளூராட்சி தேர்தலை நடத்துமாறு எதிர்கட்சிகள் கோரி வருகின்றன. ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டு தேர்தலை தடுப்பதற்கான சூழ்ச்சிகளில் ஈடுபடுகின்றார் - என்பதே எதிரணியினரின் பிரதான குற்றச்சாட்டு. தேர்தலை நடத்துமாறு கோரி ஜே. வி. பி. போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது. ஐக்கிய மக்கள் சக்தி அமெரிக்காவின் தலையீட்டை கோருகின்றது. அமெரிக்க வெளிவிவகார குழுவும் உள்ளூராட்சி தேர்தலை நடத்துமாறு அண்மையில் கோரியிருந்தது. அடிப்படையில் உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படாவிட்டால் இலங்கையின் ஜனநாயகத்துக்கு ஆபத்து நேரும் என்பதே அனைத்துத் தரப்பினரின் வாதமாக இருக்கின்றது.

இது உண்மை என்றால், இதுவரையில் மாகாண சபை தேர்தல் இடம்பெறாமல் இருப்பதும் அந்தத் தேர்தலை நடத்துவதில் இப்போதும் கூட அக்கறையற்றிருப்பதை நாம் எந்த ஜனநாயகத்தில் சேர்க்கலாம்? மாகாண சபை தேர்தலை நடத்துமாறு ஜே. வி. பியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஏன் போராட்டங்களில் ஈடுபடவில்லை? உள்ளூராட்சி தேர் தலை பிற்போடுவது ஜனநாயக விரோதமென்றால் மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்தும் பிற்போட்டுவருவது ஜனநாயக விரோதமில்லையா?

ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில் மாகாண சபை தேர்தல் பிற்போடப்படுவதற்கு, சம்பந்தன்- சுமந்திரன் தலைமையிலான கூட்டமைப்பும் ஆதரவளித்தது. சம்பந்தன் - சுமந்திரன் தரப்பு மாகாண சபை தேர்தலை நடத்துமாறு அழுத்தங்களைப் பிரயோகித்திருந்தால் மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டிருக்கும். ஆனால், மாகாண சபை தேர்தலை திட்டமிட்டு பிற்போடுவதற்கு சம்பந்தன் ஆதரவளித்திருந்தார். இப்போது ஜனநாயகத்தின் அருமை பற்றி பேசி வரும் சுமந்திரன் அப்போது ஏன் மாகாண சபை தேர்தலை பிற்போடுவதை ஆதரித்திருந்தார்? இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் மக்களுக்கு பதிலளிப்பார்களா? நான்கு வருடங்களாக ஆளுநர்களின் தன்னிச்சையான தீர்மானங்களால் மாகாண நிர்வாகம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது எந்தவகையில் ஜனநாயகம்?

இன்று உள்ளூராட்சி தேர்தலை நடத்தினால் தாங்கள் வெற்றிபெற முடியுமென்று நம்பும் ஜே. வி. பியோ ஜனநாயகம் தொடர்பில் பேசுகின்றது. ஆனால், மாகாண சபை தேர்தல் தொடர்பில் ஒருபோதும் பேசியதில்லை. எனெனில், உரிய காலத்தில் மாகாண சபை தேர்தல் நடைபெற்றிருந்தால் அதில் ஜே. வி. பி. படுமோசமான தோல்வியை சந்தித்திருக்கும். இதன் காரணமாகவே மாகாண சபை தேர்தலுக்காக ஜே. வி. பி. குரல் கொடுக்கவில்லை. ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில் மாகாண சபை தேர்தல் பிற்போடப்படுவதற்கு எதிராக சஜித் பிரேமதாஸ பேசியதில்லை. ஆனால், இப்போது ஜனநாயகம் தொடர்பில் அவர் உரத்துப் பேசுகின்றார்.

இலங்கையின் ஜனநாயக கலாசாரத்தின் சீரழிவு நாம் அறிந்ததே - ஆனால், அந்தச் சீரழிவை வெறுமனே உள்ளூராட்சி தேர்தலுடன் மட்டுப்படுத்தி விவாதிப்பதுதான் தவறானது. ஜனநாயகம் என்பது வெறுமனே தேர்தல் மட்டுமல்ல. ஜனநாயகத்துக்குப் பல பரிமாணங்கள் உண்டு. இன்றுவரையில் அரசமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப்படுவதை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் முன்னெடுக்கவில்லை. இது எவ்வாறான ஜனநாயகம்? அரசியலமைப்பில் இருப்பதை அமுல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் - இது அரசியலமைப்பை மீறும் செயலாகுமென்று எந்தக் கட்சியும் போராடவில்லையே! ஏன்?

# அரச ஊழியர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் சட்டமியற்ற நடவடிக்கை!

## அமைச்சர் ஜானக வக்கும்புர

கொழும்பு, மார்ச் 08

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கு தேர்தல் ஒத்திவைக்கப்படும் பட்சத்தில் அநீதி இழைக்கப்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஜானக வக்கும்புர நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை சரியான நேரத்தில் நடத்த முடியாவிட்டால், உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் எந்தவோர் அரசாங்க ஊழியர்களுக்கும் அசௌகரியம் ஏற்படாத வகையில், நிறுவனங்களின் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளுடன் இணைந்துள்ள பல்வேறு அரச நிறுவனங்களில் பணியாற்றும் பெருமளவிலான ஊழியர்கள் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுகின்றனர். மேலும், விரிவான அறிக்கை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்- என்றார். (ஐ)

# இரு பேருந்துகள் மோதியதில் ஒருவர் மரணம்; 23 பேர் காயம்!

கேகாலை, மார்ச் 08

இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். 23 பேர் காயமடைந்துள்ளனர்

நீர்கொழும்பில் இருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும் கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ் ஒன்றுமே கேகாலை - மாவனெல்லை கனேகொடையில் மோதியதில் பேருந்து ஓட்டுநர் உட்பட 23 பேர் காயமடைந்து மாவனெல்லை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் நீர்கொழும்பைச் சேர்ந்த 59 வயது நபர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 08

கரிதாஸ் - கியூடெக் யாழ்ப்பாணம் நிறுவனம் வருடாந்தம் நடத்தும் மகளிர் தினம் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். புனித மடுத்தீனார் குரு மட முன்றலில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு முன்னதாக, "மகளிர் உரிமையை மதிப்போம்" என்ற தொனிப் பொருளில் விழிப்புணர்வு நடைபவனி கரித்தாஸ் நிறுவன முன்றலில் ஆரம்பமாகி புனித மடுத்தீனார் குருமட முன்றலில் நிறைவடையும். தொடர்ந்து சுயதொழில் விழிப்புணர்வு கண்காட்சியும் நடைபெறும். (ஐ)

# வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கு வாய்ப்பு

## அரச அச்சக பிரதானி

கொழும்பு, மார்ச் 08

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் வெற்றியடைந்துள்ளது. இதனால், வாக்குச் சீட்டு அச்சிடுவதற்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்ள திறைசேரிக்கு அறிவிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு தெரிவித்ததாக அரசாங்க அச்சக அலுவலகத்தின் பிரதானி கங்கானி லியனகே தெரிவித்தார். மேலும் வாக்குச் சீட்டு அச்சடிக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர் கூறினார். தற்போது அச்சிடப்பட் டுள்ள தபால் மூல வாக்குச் சீட்டுகளை மீள் பரிசீலனை செய்து அவற்றை வழங்குமா றும், பொலிஸ் பாதுகாப்புக்காக பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுக்குமாறும் ஆணைக்குழு குறிப்பிட்டதாக கங்கானி லியனகே தெரிவித்தார்.

# சொற்பொழிவு


யாழ்ப்பாணம், மார்ச் 08

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் வாராந்த சுக்கிர வார சிறப்பு சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்ட பத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமை உரையைத் தொடர்ந்து, சிறப்பு சொற்பொழிவை சைவப் புலவர் பொன். சந்திரவேல் "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட் டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 08 புதன்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 24
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : பிரதமை




**மேடம்**
அரசு வழியில் உண்டான சிக்கல்கள் விலகும். தடைபட்டிருந்த முயற்சிகள் நிறைவேறும். காலையிலேயே நல்ல செய்தி வரும். செயல்கள் நீங்கள் நினைத்தபடி இன்று நடந்தேறும்.

**இடபம்**
சுறு சுறுப்பாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் கூடும். பணியிடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். வருமானம் கூடும்.

**மிதுனம்**
நீண்ட நாளாக தடைபட்டிருந்த முயற்சி இன்று நடந்தேறும். பொன் பொருள் சேர்க்கை ஏற்படும். புதிய முயற்சிகள் ஆதாயம் தரும். அரசியல்வாதிகளின் எண்ணம் நிறைவேறும்.

**கடகம்**
உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். விஜபிகளின் ஆதரவால் விரும்பியதை அடைவீர். தடைபட்டிருந்த வருவாய் வந்து சேரும். புதிய சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். புகழ் உயரும்.

**சிம்மம்**
திட்டமிட்டு செயல்படுவதால் நன்மைகள் ஏற்படும். நெருக்கடி விலகும். நிதிநிலை உயரும். பணியிடத்தில் உங்கள் ஆலோசனைக்கு மதிப் பேற்படும். பிறரால் பாராட்டப்படுவீர்கள்.

**கன்னி**
திடீரென்று வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். செலவுகள் அதிகரிக்கும். அலைச்சல் சோர்வடைவீர்கள் என்றாலும், உங்கள் முயற்சியில் லாபம் காண்பீர்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள்.

**துலாம்**
செயல்களில் ஆதாயம் ஏற்படும். எதிர்பார்ப்பு நிறைவேறும். நிதிநிலை உயரும். லாபகரமான முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். நீங்கள் விரும்பி யதை அடைவீர்கள். ஆதாயமான நாள்.

**விருட்சிகம்**
தொழிலில் இருந்த தடைகள் விலகும். பங்குதாரர்களை அனுசரித்துச் செல்வது நன்மையாகும். வியாபாரத்தில் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் அனுகூலம் உண்டாகும். வருமானம் கூடும்.

**தனுசு**
கடந்தகால அனுபவத்தைக் கொண்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள் தந்தை வழி உறவுகளுடன் மோதல் உண்டாகலாம். வார்த்தைகளில் கவனம் தேவை. உங்கள் செயலில் வெற்றி காண்பீர்கள்.

**மகரம்**
உங்கள் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறாமல் போகும். செயல்களில் சங்கடம் தோன்றும். புதிய முயற்சிகளையும், வெளியூர் பயணங்களையும் தவிர்ப்பது நன்மையாகும்.

**கும்பம்**
நண்பர்கள் ஒத்துழைப்புடன் புதிய முயற்சிகள் வெற்றியாகும். பண வரவு அதிகரிக்கும். தம்பதி இடையே உண்டான பிரச்னை விலகும். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.

**மீனம்**
பணியிடத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் விலகும். மறை முக எதிரிகள் பலமிழந்து போவார்கள். சுறு சுறுப்புடன் செயல்படுவீர்கள். புதிய முயற்சி ஒன்றை மேற்கொள்வீர்கள். வெற்றி காண்பீர்கள்.

# தி. மு. க. ஆட்சியை அகற்றுவதற்கு சதி

## முதல்வர் ஸ்டாலின் சாடல்

சென்னை, மார்ச் 08

தி. மு. க. ஆட்சியை அகற்ற சதி நடப்பதாக முதல்வர் மு. க. ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாகர்கோவிலில் முன்னாள் முதல்வர் கருணாநிதி உருவச்சிலையை முதல்வர் மு. க. ஸ்டாலின் திறந்து வைத்தார். அங்கு அவர் பேசுகையில், “அண்ணா மற்றும் கருணாநிதியின் இலட்சியங்களை நிறைவேற்ற பாடு பட வேண்டும். ஆட்சியில் இருந்தாலும், இல்லா விட்டாலும் இலட்சியங்களை நிறைவேற்ற பாடுபட வேண்டும்.

தமிழகத்தில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு மாநிலத்தவர்கள், அந்த மாநிலங்களின் தலைவர்கள் நம்மை வாழ்த்திக் கொண்டு உள்ளனர். கடல் கடந்து வாழ்பவர்களும் ஆட்சியின் சாதனைகளைப் பார்த்து பாராட்டி கொண்டுள்ளனர்.

ஆனால், நாட்டை பிளவுபடுத்த வேண்டும் என்று உலவிக் கொண்டு இருக்கும் சிலர், இந்த ஆட்சி திராவிட மொடல் என்று சொல்லி தமிழக மக்களை கவரக் கூடிய வகையில் ஆட்சி செய்து கொண்டு உள்ளதால், தொடர்ந்து ஆட்சியை விட்டால், நம்முடைய பிழைப்பு என்ன ஆவது என்று நினைத்து புழுதி வாரி தூற்றிக் கொண்டுள்ளார்கள். இந்த ஆட்சியை அப்புறப்படுத்த வேண்டும் என்று பல்வேறு திட்டங்களை தீட்டிக் கொண்டு உள்ளார்கள்.

கலவரத்தை ஏற்படுத்தலாமா, சாதி கலவரத்தைத் தூண்டலாமா, மதக் கலவரத்தை ஏற்படுத்தலாமா, மக்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்தலாமா என்று திட்டமிட்டு அந்த காரியங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். தேவையற்ற விமர்சனங்களுக்கு நான் பதில் சொல்வது இல்லை. விரைவில் பாராளுமன்றத் தேர்தல் வர உள்ளது. சிறப்பான கூட்டணி அமைத்து, அனைத்து தேர்தல்களிலும் மிகப் பெரிய வெற்றியை தொடர்ந்து பெற்றுக் கொண்டு வருகிறோம். இதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை - என்றார்.

(ஐ)

# ஈழ விடுதலைப் போராட்டத்தை இந்திய அரசாங்கமும் ஆதரித்தது!

## திருமாவளவன் தெரிவிப்பு

சென்னை, மார்ச் 08

ஈழத் தமிழர்களுக்காக போராடியதில் ம. தி. மு. க. பொது செயலாளர் வைகோவின் பங்களிப்பு மகத்தானது. எம். ஜி. ஆரும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான களத்தில் இருந்தார் என்பதை யாரும் மறுக்க முடியாது. ராஜீவ் காந்தி படுகொலைக்கு முன்பு வரை ஈழ விடுதலைப் போராட்டத்தை எல்லா கட்சிகளும் ஆதரித்தன - இந்திய அரசும் ஆதரித்தது - என்று கூறியுள்ளார் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன்.

அண்மையில், தனியார் தொலைக்காட்சி விவாதத்தில் கலந்து கொண்டார். அப்போது ஈழத்தமிழர் பிரச்னையில் ம. தி. மு. க. பொது செயலாளர் வைகோ குறித்து விரிவாக பேசாமல் கடந்து சென்றாரென குற்றச்சாட்டு எழுந்தது. இதற்கு ம. தி. மு. கவினர் வருத்தம் தெரிவித்தனர். இது தொடர்பாக திருமாவளவனிடம் நிருபர்கள் கேட்டபோது,

ஒவ்வொருவரும் அவரவர் வலிமைக்கேற்ப ஈழத்தமிழர் பிரச்னையில் பங்களிப்பை செய்திருக்கிறார்கள். திராவிட கழகத்தைச் சேர்ந்த பல்வேறு தலைவர்களும் அவரவர் வலிமைக்கேற்ப பங்களிப்பை செய்துள்ளார்கள் - ஒத்துழைப்பை தந்துள்ளார்கள். அண்ணன் பிரபாகரன் அவர்களுடன் நான் பேசும்போது, இலங்கை தமிழர்கள் விவகாரத்தில் தமிழக தலைவர்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பு குறித்து கருத்தையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார். அதில் நான் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டுமே வெளிப்படுத்தி இருக்கிறேன்.

இதில், தனித்து ம. தி. மு. க. பற்றி மட்டும் கூற நான் விரும்பவில்லை. ஈழத் தமிழர்களுக்காக போராடியதில் ம. தி. மு. க. பொது செயலாளர் வைகோவின் பங்களிப்பு மகத்தானது. எம். ஜி. ஆரும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான களத்தில் இருந்தார் என்பதை யாரும் மறுக்க முடியாது. ராஜீவ் காந்தி படுகொலைக்கு முன்பு வரை ஈழ விடுதலைப் போராட்டத்தை எல்லா கட்சிகளும் ஆதரித்தன - இந்திய அரசும் ஆதரித்தது. இந்திரா காந்தி ஆதரவு இல்லை என்றால் இந்த இயக்கங்கள் இந்த அளவுக்கு வளர்ந்திருக்காது. இந்திரா காந்திதான் ஆயுதங்களை அள்ளிக் கொடுத்தவர். தமிழகம் முழுக்க இருந்தவர்களுக்கு பயிற்சி அளித்தவர். இதில் விடுதலைப் புலிகளும் அடக்கம். ஆயுதங்களை கீழே போடுங்கள் என ராஜீவ் காந்தி காலத்தில் கூறியதில்தான் முரண்பாடு வந்தது - என்றார்.

(ஐ)

# புலம்பெயர் தொழிலாளர் பாதுகாப்பில் திருப்தியுள்ளது!

## தமிழகம் வந்த பீகார் குழு

சென்னை, மார்ச் 08

தமிழ்நாட்டில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புத் தர தமிழ்நாடு அரசு எடுத்துள்ள நடவடிக்கை திருப்திகரமாக உள்ளது என்று பீகார் குழு தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள வட மாநிலத் தொழிலாளர்கள் தாக்கப்படுகின்றனர் என்று வதந்திகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.

இதையடுத்து தமிழகத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் பாதுகாப்பாக உள்ளனர். வதந்திகளைக் கண்டு அச்சப்பட வேண்டாம் - என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே, புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்ய பீகார் அதிகாரிகள் குழு தமிழகம் வந்து கோவை, திருப்பூர், சென்னை ஆகிய இடங்களில் கடந்த சில தினங்களாக ஆய்வு செய்தது.

இதன்பின்னர் பீகார் குழுவினர் நேற்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளரை சந்தித்துப் பேசினர். பின்னர் செய்தியாளர்களையும் சந்தித்தனர். இதன்போது, தமிழ்நாட்டில் பல இடங்களில் புலம்பெயர் தொழிலாளர்களிடம் கருத்து கேட்டோம். பீகாரிலிருந்து 30 ஆண்டுகள், 16 ஆண்டுகளாக பணிபுரிபவர்களும் உள்ளனர். பீகாரில் இருந்து இங்கு வந்து தொழில் செய்பவர்களும் இருக்கிறார்கள்.

புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு தர தமிழ்நாடு அரசு எடுத்துள்ள நடவடிக்கை திருப்திகரமாக உள்ளது - என்றனர்.

(ஐ)






# ஹரக் கட்டா, குடு சலிந்து மடகாஸ்கரில் சிக்கினர்!

கொழும்பு, மார்ச் 08

தலைமறைவாக உள்ள பாதாள உலகக் குற்றவாளிகளான ஹரக் கட்டா என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்ரமரத்ன மற்றும் சலிந்து மல்ஷித குணரத்ன என்ற குடு சலிந்து உள்ளிட்ட 8 பேர் மடகாஸ்கரில் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 8 பேரும் மடகாஸ்கரில் உள்ள இவாடோ சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஹரக் கட்டாவின் மனைவி என்று கூறிக் கொள்ளும் மலேசிய பெண்ணும் உள்ளடங்குகிறார். மார்ச் முதலாம் திகதி ஹரக் கட்டா உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

ஹரக் கட்டா மற்ற ஐந்து பேர் பெப்ரவரி 12 அன்று நாட்டின் நோசி பி சர்வதேச விமான நிலையத்திற்கு ஒரு தனியார் ஜெட் விமானத்தில் வந்தனர். உள்ளூர் ஊடக அறிக்கைகளின்படி, அவர்கள் மார்ச் முதலாம் திகதி மடகாஸ்கரை விட்டு வெளியேறும்போது கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டபோது, ஹரக் கட்டா ஒரு பணக்கார தொழிலதிபர் போல் காட்டிக் கொண்டார். அவர் நீல ஐரோப்பிய உடை அணிந்திருந்தார். குடு சலிந்து உட்பட ஏனைய குழுவினர் ஹரக் கட்டாவின் மெய்ப்பாதுகாவலராக தோன்றியிருந்தனர்.

இலங்கை நீதிமன்றங்களால் பெறப்பட்ட உத்தரவுகள் மற்றும் பொலிஸ் அறிக்கைகளின் பிரகாரம், ஹரக் கட்டா உள்ளிட்ட பாதாள உலகக் குற்றவாளிகளுக்கு எதிராக இன்டர்போல் சிவப்பு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

சர்வதேச பொலிஸின் சிவப்பு அறிவிப்பின்படி, ஹரக் கட்டா மட்டும் மடகாஸ்கர் பாதுகாப்புப் படையினரால் தெளிவாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விசாரணைகள் மூலம் குடு சலிந்து அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஹரக் கட்டா மற்றும் பலர் தாங்கள் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து இரண்டு சொகுசு கார்களில் இவாடோ விமான நிலையத்திற்கு வந்தனர் என உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஹரக் கட்டாவின் மனைவியெனக் கூறும் மலேசிய பெண்ணிடம் உள்ளூர் நாணயத்தில் 38 மில்லியனுக்கும் அதிகமான பணத்தை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

டுபாய், மலேசியா, சிங்கப்பூர், சீஷெல்ஸ், மாலைதீவு மற்றும் மடகாஸ்கர் ஆகிய நாடுகளில் ஹரக் கட்டா போதைப்பொருள் விநியோகம் செய்வதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹரக் கட்டா உள்ளிட்டோர் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கைது தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் சர்வதேச பொலிஸ் பிரிவுக்கு உத்தியோகபூர்வமாக தகவல் கிடைக்கவில்லை.

சந்தேகநபர்களுக்கு எதிராக சர்வதேச பொலிஸாரிடமிருந்து சிவப்பு அறிவித்தலைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்திருந்த பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்துக்குக் கூட இது தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை.

இந்த கைது தொடர்பான தகவல்களை மடகாஸ்கரில் இருந்து சர்வதேச பொலிஸாரின் ஊடாக பரிசோதித்து இந்த கைது தொடர்பான உண்மைகளை உறுதிப்படுத்தவுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். உண்மைகளை உறுதிப்படுத்தியதன் பின்னர் அந்த நாட்டுடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களை நடத்தி சந்தேக நபர்களை இலங்கைக்கு அழைத்து வர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அந்த அதிகாரி கூறினார். (அ)

# பஸ் கட்டணங்களை குறைக்க ஆலோசனை

கொழும்பு, மார்ச் 08

பஸ் கட்டணங்களை எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன்னர் குறைப்பது குறித்து ஆலோசித்து வருவதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் காரணமாக பஸ்களுக்கு அதிக வருமானம் கிடைப்பதாக, அதன் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்த ஆண்டின் முதல் 2 மாதங்களில் போராட்டங்கள் காரணமாக பஸ்களுக்கு 500 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக பொலிஸாரிடமும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் முறைப்பாடு தெரிவிக்கவுள்ளதாக கெமுனு விஜயரத்ன கூறினார்.

# நிதிக் குழு தற்காலிக தலைவர் நியமனம் முற்றிலும் தவறானது

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 08

**நிதியியல் கட்டளை சட்டத் தின் புதிய பிரிவுக்கு அமைவாக நிதிக்குழுவுக்கு தற்போது நியமிக்கப்பட்டுள்ள தற்காலிக தலைவர் நியமனம் என்பது முற்றிலும் தவறானது என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிதியியல் கட்டளை சட்டத்தின் புதிய பிரிவு எமது கைகளுக்கு கிடைக்கவில்லை. சபாநாயகரிடம் மட்டுமே அந்த பிரிவு காணப்படுகின்றது.

சபாநாயகர் புதிய பிரிவை வாசிக்கும்போது எமது கைகளில் இருந்த பழைய பிரிவில் சில விடயங்கள் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

புதிய பிரிவின் 130ஆம் பிரிவின் 6ஆவது சரத்தில் நிதிக்குழுவின் தலைவர் சமூகமளிக்காத சந்தர்ப்பத்தில் நிதிக் குழுவினால் தெரிவுசெய்யப்படும் அந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் வேறு ஒரு உறுப்பினருக்கு அந்தப் பதவி வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

அதாவது நிதிக்குழுவின் தலைவர் சமூகமளிக்காத சந்தர்ப்பத்திலேயே தற்காலிகமாக ஒருவர் தலைவராக நியமிக்கப்படுகின்றார்.

தற்போது நிதிக் குழுவுக்குத் தலைவர் ஒருவர் இல்லை. எனவே அந்த தலைவர் பதவியானது எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருக்கே வழங்கப்படவேண்டும்.

நிதிக்குழுவின் தலைமை பதவி எனக்கு கிடைக்கின்றதோ அல்லது வேறு யாருக்கும் கிடைக்கின்றாதோ அது வேறு விடயம்.

எனினும் அரசாங்கத்தினால் எதிர்க் கட்சி உறுப்பினரை நியமிப்பதைவிட எதிர்க் கட்சியினால் எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவரது பெயர் பரிந்துரைக்கப்படவேண்டும்.

எனவே புதிய நிலையியற் கட்டளையில் 130 6ஆம் பிரிவுக்கு அமைவாக தற்போது நியமிக்கப்பட்ட நியமனமானது முற்றிலும் தவறானது'- என்றார்.

(அ-கே)

# ஓட்டோ திருட்டுச் சம்பவம் ஐவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மார்ச் 08

பொரலஸ்கமுவ பிரதேசத்தில் ஓட்டோ ஒன்று திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓட்டோ திருட்டு தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பொரலஸ்கமுவ பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, சந்தேகநபர்களால் முன்னர் திருடப்பட்ட 03 ஓட்டோக்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்கள் 23 வயதுக்கும் 32 வயதுக்கும் இடைப்பட்ட தெஹிவளை, நாவலப்பிட்டி, ரொசெல்ல, ஹட்டன் மற்றும் கொட்டகலை பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இது தொடர்பில் பொரலஸ்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# செயலாளர் பதவியிலிருந்து சாகரவும் விலக வேண்டும்!




கொழும்பு, மார்ச் 08

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் பதவியிலிருந்து பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பதவி நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

கட்சியின் செயலாளர் நாயகம் சாகர காரியவசமும் குறித்த பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என அவர் கூறினார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், கட்சியின் தலைவர் பதவியில் இருந்து ஜீ.எல். பீரிஸ் நீக்கப்படுவார் என்பது வேடிக்கையானது. கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக செயற்படும் சாகர காரியவசம் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் - என்றார்.

# யார் இந்த ஜி. பார்த்தசாரதி?



கொழும்பு, மார்ச் 08

இந்தியாவின் முன்னணி இராஜதந்திரியும் ஊடகவியலாளரும் புத்திஜீவியுமான கோபால்சுவாமி பார்த்தசாரதி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இவர் கொழும்பில் பல்வேறு அரசியல் சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ளார்.

இவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸவையும் சந்தித்து பேசினார். இது தொடர் பான செய்தி நேற்றைய ஈழநாட்டின் 7ஆம் பக்கத்தில் வெளியாகியது.

அதில், ஜி.பார்த்தசாரதி இந்திய முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர் என்றும் அவரை இந்திரா காந்தி இலங்கைக்கான நல்லெண்ணத் தூதுவராக நியமித்திருந்தார் என்றும், முன்னாள் வெளியுறவுச் செயலராக கடமையாற்றியவர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும் அது தவறு.

இந்திய முன்னாள் பிரதமர் இந்திரா காந்திக்கு நெருக்கமானவரும் இராஜதந்திரப் பதவிகள் பலவற்றை அலங்கரித்தவருமான அந்த ஜி.பார்த்தசாரதி கடந்த 1995 ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி காலமாகிவிட்டார்.

தற்போது இலங்கை வந்துள்ள ஜி.பார்த்த சாரதி இந்திய இராணுவத்தின் ஓய்வு பெற்ற அதிகாரி. சைப்பிரஸ், அவுஸ்திரேலியா, மியன்மார் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான இந்திய தூதுவராக கடமையாற்றிருந்தார்.

அத்துடன் வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளராகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.

அக்காலப்பகுதியில் அவர் இலங்கைக்குப் பல தடவைகள் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

தற்போது ஜம்மு மத்திய பல்கலைக்கழகத் தின் வேந்தராகவும், இந்தியா - புதுடில்லி காற்றாலைச் சக்தி கற்கைகள் மையத்தின் பணிப்பாளராகவும் அவர் கடமையாற்றி வருகின்றார்.

கடந்த இருபது ஆண்டுகளாக தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை விவகாரங்களில் பிரச்னைகள் தொடர்பாக ஆங்கிலம் மற்றும் ஹிந்தி அலைவரிசைகளில் தொலைக்காட்சி வர்ணனையாளராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

நேற்றைய தினம் ஈழநாட்டில் இது தொடர்பில் வெளியாகிய செய்திக்கு வருந்துகிறோம்.

(ஆ-ர்)

# சபையில் சர்ச்சையை கிளப்பிய நிதிக்குழுவின் தலைமைப் பதவி!

கொழும்பு, மார்ச் 08

**நிதிக்குழுவுக்கு தற்காலிக தலைவராக ஆளுங்கட்சியை சேர்ந்த ஒருவரை நியமித்த விடயம் நேற்றைய பாராளுமன்ற அமர்வில் எதிரொலித்தது.**

**பாராளுமன்ற அமர்வு நேற்று முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகியபோது 09.30 மணிமுதல் 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப் பட்டது.**

இதன்போது ஒழுங்குப் பிரச்னை ஒன்றை முன்வைத்து சபையில் உரையாற்றிய எதிர்க் கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, நிதிக் குழுவின் தற்காலிக தலைவராக ஆளுங்கட்சியை சேர்ந்தவரை நியமித்ததை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார்.

நிதிக்குழுவின் தற்காலிக தலைவராக வஜிர அபேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார் என்று அறிய முடிந்தது. ஊடகங்கள் இவ்வாறான செய்தியை வெளி யிட்டுள்ளன.

நிலையியல் கட்டளைச் சட்டத்தின் 121ஆவது பிரிவுக்கு அமைவாக எதிர்க் கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பி னரே நிதி குழுவின் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்.

நிதிக்குழுவுக்கான தலைவர் தற்காலிக தலைவராக இருந் தாலும்கூட அந்த தலைவர் எதிர்க் கட்சியிலிருந்தே நியமிக்கப்பட்டு இருக்க வேண் டும்.

கடந்த இரண்டறை வருடங் களாக நாம் இந்த விடயத்தை வலியுறுத்தி வருகின்றோம்.

ஆரம்பத்திலும் எமக்கு நிதி குழுவின் தலைமை பதவி வழங்கப்படவில்லை.

போராட்டம் முன்னெடுக் கப்பட்ட காலத்தில் குறித்த பதவி வழங்கப்பட்டது.

தற்போது மீண்டும் பழைய வழக்கத்தையே முன்னெடுத்து செல்கின்றீர்கள்.

நிலையியற் கட்டளையை மீறும் வகையிலேயே செயற் படுகின்றீர்கள்.

நிதிக் குழுவுக்கு தற்காலிக தலைவராக ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்தவரை எவ் வாறு நியமிக்க முடியும். நிலை யியற் கட்டளைக்கு அமைவாக இது தவறான விடயமாகும்.

ஆளுங்கட்சியை சேர்ந்த வரை நியமிக்க முடியாது.

ஆளுங்கட்சியை சேர்ந்த வரை நிதிக்குழுவின் தலைவ ராக நியமிக்கப்ப முடியும் என்று எங்கு கூறப்பட்டு இருக் கின்றது என்பதை பாராளுமன்ற செயலாளர் நாயகம் காண்பிக்க வேண்டும் என்றார்.

இதன்போது பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அரசியலமைப் பின் 130/6ஆம் பிரிவை நீங்கள் முதலில் வாசியுங்கள் என்றார்.

இதன்போது மீண்டும் குறுக் கிட்ட லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி,

நீங்கள் கூறுவது சரி. எனி னும் அந்தப் பிரிவில் ஆளுங் கட்சியின் உறுப்பினரை நிய மிக்க முடியும் என்று எந்த இடத்திலாவது கூறப்பட்டுள் ளதா என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளத்த சபாநாயகர்,

"அவ்வாறு கூறவில்லை. யாரேனும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரை நியமிக்குமாறே கூறப்பட்டுள்ளது.

நிதிக்குழுவின் நடவடிக்கை களை முன்னெடுத்து செல்வதற் காக தற்காலிக தலைவரே தற்போது நியமிக்கப்பட்டுள் ளார்" என்றார்.

இதன்போது மீண்டும் குறுக்கிட்ட லக்ஷ்மன் கிரி யெல்ல எம்.பி,

"தற்காலிக தலைவர் நிய மனம் என்றாலும்கூட அந்தப் பதவிக்கு ஆளுங்கட்சியை சேர்ந்தவரை நியமிப்பது முற்றி லும் தவறானது. எதிர்க் கட் சியை சேர்ந்தவரையே நியமிக்க வேண்டும்.

இவ்வாறான நியமனங்களி னூடாக பாராளுமன்றத்தின் கீர்த்திநாமத்துக்கு இழுக்கை ஏற்படுத்தாது தீர்க்கமான நிலைப்பாட்டுக்கு வர வேண்டும்" என்றார்.

இந்நிலையில் இதற்கு பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் மனுச நாணயக்கார,

நிதிக்குழுவுக்கு தற்காலிக தலைவராக இருந்த பாராளு மன்ற உறுப்பினர் மயந்த திசா நாயக்கவை அந்தப் பதவியில் இருந்து பலவந்தமாக வெளி யேற்றியது கட்சிக்குள் இருக் கும் பிரச்னையாகும் என்றார்.

நிதி குழுவின் தலைவர் பதவிக்கு எந்த பாராளுமன்ற உறுப்பினரையும் நியமிக்க முடியும்.

எனவே எதிர்க் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ஹர்ஷ டி சில்வாவையே அந்தப் பதவிக்கு நியமிக்க வேண்டும் என்பது இல்லை.

எதிர்க் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் மயந்த திசா நாயக்கவை அந்தப் பதவிக்கு நியமித்தபோது அவரை பலவந்தமாக வெளியேற்றியது கட்சிக்குள் இருக்கும் பிரச்னை யாகும்.

அதற்கு அடுத்ததாக பாட் டாலி சம்பிக்க ரணவக்கவின் பெயரை பரிந்துரைத்தபோது அதனையும் ஏற்றுக்கொள்ள வில்லை - என்றார்.

(அ-கே)

# ரஷ்ய பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி மரணம்

கொழும்பு, மார்ச் 08

ஹூங்கம - கஹந்தமோதர, முகத்துவாரம் பகுதியில் ரஷ்ய பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக ஹூங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கஹந்தமோதர முகத்து வாரத்துக்கு அருகிலுள்ள கடற் கரையில் பயணித்த மூன்று ரஷ்யர்களில் ஒருவர் முகத்து வாரத்தில் இறங்கிய பின்னர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக விடுதி ஊழியர் ஒருவர் தெரி வித்தார்.

ரஷ்ய பிரஜையான செர்பி னன் பெட்ஸி என்ற 44 வயது டைய நபரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த இந்த ரஷ்ய நாட் டவர் கஹந்தமோதர பிரதேசத் தில் பத்து வருடங்களுக்கு மேலாக தனது சகோதரருடன் வசித்து வந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், தனது சகோதரனுடனும் மற்றுமொரு ரஷ்ய பெண்ணுடனும் கடற் கரையில் நடந்து சென்ற போதே இவ்விபத்து நேர்ந்துள் ளதாக பொலிஸார் தெரிவித்த னர். (அ)

# ஆசிரிய மாணவர்களுக்கு உடன் நியமனம் வழங்குக!

## இலங்கை அரச ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 08

கல்வியியல் கல்லூரியில் ஆசிரியர் கற்றலினை நிறைவு செய்த ஆசிரிய மாணவர்க ளுக்கு உடனடியாக நியமனங் கள் வழங்கப்பட வேண்டும் என இலங்கை அரச ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறில்லாவிட்டால் எதிர்காலத்தில் பாரிய தொழிற் சங்க போராட்டம் முன்னெடுக் கப்படும் என அதன் உபதலை வர் ஜீவராஜா ருபேசன் மட்டக் களப்பில் இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் வறிய நிலையில் உள்ள மாணவர்கள் இந்த ஆசிரி யர் கற்றலினை நிறைவுசெய்த நிலையிலும் அவர்கள் இன்றும் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கடந்த வருடம் தங்கள் ஆசி ரியர் கற்றலினை நிறைவு செய்த கல்வியியல் கல்லூரி மாண வர்களுக்கு இந்த ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதி முன்னதாக ஆசிரியர் நியமனம் வழங்கப் படும் என அறிவிக்கப்பட்ட போதிலும் தற்போது அது பிற்போடப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களின் ஓய்வு பெறுகின்ற வயதெல்லை மாற்றப்பட்டதை அடுத்து பல ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுள ளதனால் பாடசாலைகளில் பாரிய அளவில் தளம்பல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த தளம்பல் நிலையினை சீர்செய்வதற்கு கல்வியியல் கல்லூரியின் ஆசிரியர்களு டைய நியமனத்தினை விரை வாக வழங்க வேண்டும்-என் றார். (அ)

# அமெரிக்க திறைசேரி செயலருடன் ஜனாதிபதி ரணில் கலந்துரையாடல்

கொழும்பு, மார்ச் 08

அமெரிக்கத் திறைசேரியின் செயலாளர் ஜேனட் எல். யெலன் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையில் நேற்றுமுன்தினம் தொலைபேசி மூலமான கலந்துரையாடல் இடம்பெற் றுள்ளது.

இலங்கையின் பொரு ளாதாரச் சீர்திருத்தத்தை முன் னெடுத்துச் செல்வதற்கும் வலு வான மற்றும் நீடித்த மீட்சியை அடைவதற்குமான திட்டங்க ளுக்கு அமெரிக்காவின் ஆத ரவை அவர் வெளியிட்டார்.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்திடம் கோரப்பட்டுள்ள கடனைப் பெற்றுக் கொள்வ தற்கு இலங்கைக்கு தேவையான உதவிகளை மேலும் வழங்கு வதாக அமெரிக்க திறைசேரி செயலாளர் உறுதியளித்துள் ளார்.

அத்துடன் கடன்களை கையாள்வதில் தற்போதைய அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையைப் பாராட்டிய அமெரிக்க திறைசேரி செயலா ளர், இலங்கையின் அர்ப்ப ணிப்புகளையும் வரவேற் றுள்ளார். (அ)

# சப்ரகமுவ பல்லைக்கழகத்தின் கல்வி நடவடிக்கை மீள ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 08

காலவரையறை இன்றி மூடப்பட்ட சப்ரகமுவ பல் கலைக்கழகத்தின் கற்றல் செயற் பாடுகள் நேற்று மீண்டும் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

முகாமைத்துவ பீட முத லாம் ஆண்டு மாணவர்களுக் கும் மற்றுமொரு மாணவர் குழுவுக்கும் கடந்த 16ஆம் திகதி ஏற்பட்ட மோதலை அடுத்து சப்ரகமுவ பல்கலைக் கழகம் காலவரையறையின்ற மூடப்பட்டது.

எனினும், பிரயோக விஞ்ஞான பீடத்தின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வுள்ள தினம் உள்ளிட்ட விவரங் கள் பின்னர் அறிவிக்கப்படும் என சப்ரகமுவ பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

(அ)

# நாய் மருந்து கலந்த உணவை மகனுக்கு கொடுத்த ஆறு சக மாணவர்களையும் தண்டிக்கவேண்டாம்!

## பொலிஸாரிடம் கோரியுள்ளனர் பெற்றோர்

திருமலை, மார்ச் 08

திருகோணமலை - சேரு நுவர பிரதேசத்தில் உள்ள பாட சாலை ஒன்றில் 7 ஆம் தர மாண வன் ஒருவருக்கு மதிய உண வில், நாய்களுக்கு கொடுக்கும் மருந்தை கலந்து கொடுத்தனர் எனக் கூறப்படும் 6 மாணவர்க ளுக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுக்கவேண்டாம் என பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோர் கோரிக்கை விடுத் துள்ளனர் என சேருநுவர பொலிஸார்தெரிவிக்கின்றனர்.

இவ்வாறானதொரு செய லைச் செய்த ஆறு மாணவர் களின் எதிர்காலத்தை கருதிற் கொண்டு, பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோர் இந்த முடிவை எடுத்துள்ளதாக அப் பகுதிக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் குறித்த மாணவன், தனது வகுப்பில் கல்வி கற்கும் ஆறு மாணவர்களையும் மன் னிக்க விருப்பம் தெரிவித்துள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாய்களுக்கு கொடுக்கப் படும் மருந்தை உணவில் கலந்த தாக கூறப்படும் ஆறு மாண வர்களையும் அழைத்து எச்சரித் தால் போதும் என நோய்வாய்ப் பட்ட மாணவனின் பெற்றோர் பொலிஸாரிடம் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர் என தெரியவருகிறது.

நோய்வாய்ப்பட்ட மாண வனின் பெற்றோர் ஆறு மாண வர்களையும் மன்னிக்க முடிவு செய்திருப்பதை தாமும் பாராட் டுவதாக பொலிஸார் கூறினர்.

(அ)

# பாவனையாளர் விவகார அதிகாரசபை பணிப்பாளர் நாயகம் பதவி விலகினார்

கொழும்பு, மார்ச் 08

பாவனையாளர் விவகார அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் சுஜானி தனது பத வியை இராஜினாமா செய்துள் ளார்.

அண்மையில், அமைச்சர் நளின் பெர்னாண்டோவின் உற வினர் ஒருவரின் களஞ்சியத்தை முற்றுகையிட்ட விடயம் தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சை ளையடுத்தே சுஜானி தலை மைப் பொறுப்பை துறந்துள் ளார்.

அதிகார சபையின் புதிய தலைவர் ஒருவர் அமைச்சரால் இன்று நியமிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது. (அ)

# புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் போதை ஊசி வியாபாரம் மும்முரம்!




**முல்லைத்தீவு, மார்ச் 08**

**முல்லைத்தீவு - புதுக்குடி யிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட கைவேலி பகுதியில் போதை ஊசி வியாபாரம் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்துமாறு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத்திடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கைவேலி பகுதியில் அமைந்துள்ள பாடசாலையின் மலசல கூடத்திலும், அருகில் உள்ள ஆலயம் ஒன்றின் பகுதிகளிலும் போதைக்குப் பயன்படுத்தப்பட்ட பெருமளவான ஊசிகள் மக்களால் இனம் காணப்பட்டுள்ளதுடன், இந்தப் போதை ஊசி வியாபாரம் செய்பவர்கள் தொடர்பிலும் கிராம அமைப்பினால் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

கைவேலிப்பகுதியில் இடம்பெறும் இந்தப் போதைப் பொருள் வியாபாரத்தினால் பாடசாலை மாணவர்கள், இளம் சமுதாயத்தினர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பெண்கள் சுதந்திரமாக நடமாடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்ச்சியாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வந்தாலும் அவர்கள் வெளியில் வந்து மீண்டும் மீண்டும் அந்தத் தொழிலை மேற்கொண்டுவருவதாக மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை அழைத்த கிராம அமைப்புக்கள் மற்றும் மக்கள், தங்களின் கிராமத்தை போதையிலிருந்து மீட்டுத் தரும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்படி முதற்கட்டமாகப் போதை வியாபாரம் செய்வார்களுக்கு பொது அறிவிப்பை விடுத்துள்ளதுடன், அடுத்தக் கட்டமாக அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் போதைப்பொருள் வியாபாரம் செய்பவர்களைக் கிராம அமைப்புக்கள் இதன்போது பொலிஸாருக்கு இனம் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சீனாவின் நிதியுதவியில் விரைவில் புதிய வீடுகள்

கொழும்பு, மார்ச் 08

குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் கலைஞர்களுக்காக புதிய வீடுகளை நிர்மாணிக்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கலைஞர்கள் மற்றும் குறைந்த வருமானங்களை பெறுவோருக்காக 1996 வீடுகளை நிர்மாணிக்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் அடுத்த வாரமளவில் சீனாவுடன் கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீடமைப்பு திட்டத்திற்காக சீனா 29 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளது.

பேலியகொடை, தெமட்டகொடை, கொட்டாவ, மஹரகம மற்றும் மொரட்டுவை ஆகிய இடங்களில் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எதிர்வரும் 16ஆம் திகதி முதல் விமான கட்டணங்கள் திருத்தம்

கொழும்பு, மார்ச் 08

விமானப் போக்குவரத்து சேவைக் கட்டணத்தை அதிகரிக்க துறைமுகங்கள், கடற்படை மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த புதிய கட்டணங்கள் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தப்பட்டுள்ளன.

இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் விமானக் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வான் பரப்பை பயன்படுத்தும் வெளிநாட்டு விமானங்கள் மூலம் வருடாந்த வருமானத்தை ஒரு கோடியே இருபது இலட்சம் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வீரகெட்டியவில் பொலிஸ் அதிகாரிகள் தாக்கப்பட்டமை குறித்து 6 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 08

வீரகெட்டிய, அத்தனயால பகுதியில் சோதனை நடவடிக்கையின் போது பொலிஸ் அதிகாரிகள் சிலரைத் தாக்கிய குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞர்கள் குழுவொன்றைச் சோதனை செய்ய முற்பட்டபோது பொலிஸார் மற்றும் இளைஞர்கள் இடையில் வாய்த்தர்க்கம் வலுப்பெற்றதை அடுத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலின்போது 02 உப பொலிஸ் பரிசோதகர்கள், 02 சார்ஜன்ட்கள், 02 கான்ஸ்டபிள்கள், 02 கிராம பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் இருவரும் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதன்போது இளைஞர் ஒருவர் உப பரிசோதகர் ஒருவரின் இரு காதுகளையும் கடித்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

குறித்த உப பரிசோதகர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# தாமதமாகி வரும் முட்டை இறக்குமதி

கொழும்பு, மார்ச் 08

இந்தியாவில் இருந்து முட்டைகளை ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடைவதில் மேலும் தாமதம் ஏற்படும் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

தலைநகர் புதுடில்லியிலுள்ள கால்நடைப் பிரிவு ஊடாக கிடைக்கவேண்டிய அறிக்கை மேலும் தாமதமடைவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கூறினார்.

உரிய அனுமதி கிடைத்தவுடன் 2 மில்லியன் முட்டைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பண்டிகை காலம் முடிவடையும் வரை பல கட்டங்களாக முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சு கூறியுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் முட்டையொன்றை 40 ரூபா அல்லது அதற்கு குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# மன்னார் காற்றாலை மின்சார விவகாரம் வடமாகாண ரீதியில் பெரும் போராட்டம்!

மன்னார், மார்ச் 08

மன்னார் தீவுப் பகுதியில் அமைக்கப்பட உள்ள 2ஆம் கட்ட காற்றாலை மின்சாரம் செயல் திட்டம் குறித்தும் இந்திய மீனவர்களால் தொடர்ந்து ஏற்படும் பாதிப்பு குறித்தும் வடமாகாண ரீதியாக அனைத்து செயல்பாடுகளையும் முடக்கி போராட்டம் முன்னெடுப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்னார் தீவுப் பகுதியில் அமைக்கப்பட உள்ள 2ஆம் கட்ட காற்றாலை மின்சாரம் தொடர்பாக எதிர்ப்பு நடவடிக்கைகள் வலுப் பெற்று வரும் நிலையில், குறிப்பாக இரண்டாம் கட்ட காற்றாலை மின்சாரம் அமைக்க அதானி குழுமத்திற்குத் திட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் மாலை பிரஜைகள் குழு அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர், பொது அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகள் ஒன்று கூடிக் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இதன்போது, சட்ட நடவடிக்கைகள் மற்றும் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், தீவுப் பகுதி மக்களிடமும் பல்வேறு அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் கையெழுத்து பெறப்பட்டுச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் சர்வதேச ரீதியிலும் அனுப்பி வைக்கப்பட உள்ளதாகக் குறித்த கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்றாலை மின்சாரம் அமைப்பது தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழு மற்றும் பொது அமைப்புகள் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் சந்தர்ப்பத்தில், மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் ஊடாக மன்னார் மாவட்ட பகுதி மக்களிடம் இரண்டாம் கட்ட காற்றாலை மின்சாரம் அமைப்பதற்கான சுற்றுப்புறச் சூழல் தொடர்பான அறிக்கை கள் மக்களிடமிருந்து அர சாங்கம் கோரி இருந்தது.

இதற்கமைவாகக் குறித்த அறிக்கை ஏப்ரல் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கும்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தீவுப் பகுதியில் உள்ள பொது மக்கள் மற்றும் பொது அமைப்புகளிடம் இருந்து பெறப்படும் கையெழுத்துப் பிரதிகள் குறித்த தரப்பினரிடம் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் பெறப்பட்டு அனுப்பி வைக்கப்பட உள்ளதுடன், முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைக்குச் சர்வதேச நடவடிக்கைகளுக்கும் குறித்த கையெழுத்துப் பிரதிகள் பயன்படுத்தப்பட உள்ளது.

இதேவேளை, இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையால் மாவட்ட பகுதி மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்ல முடியாமல் நஷ்டத்தை எதிர் நோக்குவது குறித்து இந்த கூட்டத்தில் பேசப்பட்டு பாரிய அளவிலான மாவட்ட ரீதியாகவும் வடமாகாண ரீதியாகவும் அனைத்து செயல்பாடுகளையும் முடக்கி போராட்டம் முன்னெடுப்பதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(அ)

# வன்முறைகளற்ற வாழ்வென்பதை பெண் அடையாதவரை சமத்துவம் சாத்தியமற்றது!

க.ஆ.கோகிலவாணி



சர்வதேச மகளிர் தினம் இன்று உலக ளாவிய ரீதியில் கொண்டாடப்படு கின்றது. ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்தி, பெண்ணைப் போற்றும் வகையில் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடி வருகின்றோம்.

இன்றைய தினத்தில் பெண்களை போற்றுகின்றோம். வாழ்த்துகின்றோம். கௌரவிக்கின்றோம். இரத்ததானங்களை செய்கின்றோம். பல்வேறு நலன்புரி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றோம். பெண்ணுரிமைக்காக வீதிகளில் இறங்கி போராடுகின்றோம். இன்றைய நாளுடன் சர்வதேச மகளிர் தினம் நிறைவுக்கு வந்துவிடும். பெண்ணைக் கௌரவிப்பது முடிவுக்கு வந்துவிடும்.

நாளை என்ன நடக்கப்போகின்றது. எங்கோ ஒரு பெண் சிசு பாலியல் வன் கொடுமைக்கு உள்ளாக்கப்படும் . வேலியே பயிரை மேயும். குப்பைத் தொட்டிகளிலிருந்து சிசுக்களின் சடலங் கள் மீட்கப்படும். பெண்ணின் சடலங் கள் கரையொதுங்கும். கணவனின் துன்புறுத்தல் தாங்க முடியாது பொலிஸ் நிலையத்தை பெண் நாடிச் செல்வாள்.

வேலைத்தளங்களில் பாலியல் இலஞ்சத்தை பெண் வழங்க வேண்டும். பதவியை தக்கவைத்துக்கொள்வதற்காக போராட வேண்டும். சந்தர்ப்பத்துக்காக அணுகும் ஆணை சமாளிக்க வேண்டும்.

இதுவே யதார்த்தம். எதனை அடைந்துவிட்டோம் என்பதற்காக இந்த நாளை கொண்டாடுகின்றோம் என்பதே நாம் முன்வைக்கும் கேள்வி? பச்சிளம் பெண் குழந்தையைகூட விட்டு வைக் காத இந்த சமூகத்தில் பெண்ணுக்கு பாதுகாப்பு இருக்கின்றதா?

**பெண், ஆண் சமத்துவம் நிலைநாட்டப்பட்டுவிட்டதா?**

பெண்களைப் போற்றுவதற்குரிய நாளாக அமைந்துள்ள இன்றைய நாளில், பெண் என்பவள் போற்றப்படும் நிலை யில் இருக்கின்றாளா?

ஆண், பெண் சமத்துவம், பெண்ணு ரிமை, சமூகத்தில் சமபங்கு என்று ஆண்டாண்டு காலமாக கூறி வந்தாலும் இன்னும் அந்த நிலை அடையப்பட வில்லை என்பதே நிதர்சனம்.

சமூகத்தில் சமபங்குக்காக பெண்ணா னவள் போராடிக்கொண்டுதான் இருக் கின்றாள். இன்னும் போராட வேண்டிய நிலையிலேயே இருக்கின்றாள்.

சகல துறைகளிலும் பெண் கால் பதித்துவிட்டாள் என்பதற்காக பெண் ணுக்கு சம உரிமை கிடைத்துவிட்டதாக அர்த்தமாகாது. ஆடைச் சுதந்திரம் இருக்கின்றது என்பதற்காக பெண்ணுக்கு சம உரிமை கிடைத்துவிட்டதாக அர்த்தமாகாது.

ஆணுக்கு நிகராக பெண் மது பானத்தை கையிலேந்துவதும் புகைவிடுவது ம் போதைப்பொருட்களை உட்கொள்வதும் சமத்துவம் கிடையாது.

பெண்ணும் ஆணும் சமம் என்று கூறும் நிலைமையே சமத்துவமாகும். அந்த சமத்துவம் இன்னும் இந்த சமூகத் தில் எட்டப்படவில்லை. சகல விடயங் களிலும் சமத்துவம் என்பது உறுதிப் படுத்தப்பட வேண்டும்.

பெண்ணைப் போகப்பொருளாகவும் இச்சையைத் தீர்த்துக்கொள்ளும் இயந் திரமாகவும் பார்க்கும் நிலைமையில் சமத்துவம் என்பது சாத்தியப்படாது.

பெண்ணிடம் சந்தர்ப்பம் கேட்கும் நிலைமையே தொடர்கின்றது. பெண்க ளின் வாழ்க்கையில் இசைந்து போதல் என்ற வார்த்தை இன்று சரளமாகி போயிற்று.

பொதுப்போக்குவரத்தில் பெண்ணு டல் உரசப்படுவது நிறுத்தப்பட்டுவிட வில்லை. மூர்க்கப்பார்வைகள் வீசப் படவே செய்கின்றன.

வீட்டு வன்முறைகள் முற்றுமுழுதாக ஒளிந்துவிடவில்லை. வன்முறைகளற்ற வாழ்வுக்குள் பெண்ணும் இன்னும் செல்லவில்லை. வன்முறைகளற்ற வாழ்வு கட்டியெழுப்பப்படவில்லை.

உலகளாவிய ரீதியில் மூன்றில் ஒரு வீதமான பெண் ஏதோ ஒரு வகையில் வன்முறை, பாலியல் ரீதியிலான துன்பு றுத்தல், பாலியல் வன்முறைக்கு உள்ளா வதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

உலகளாவிய ரீதியில் 641 மில்லியன் பெண்கள் தங்களது வாழ்நாளில் ஒரு தடவையேனும் உடல்ரீதியிலான துன்பு றுத்தல் அல்லது பாலியல் வன்முறை அனுபவங்களுக்கு உள்ளாகுவதாக அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

அதேபோன்று நூற்றுக்கு 38 சதவீத மான பெண்கள் தங்களது கணவரால் கொல்லப்படுகின்றனர் என்றும் ஆய்வறிக்கை கூறுகின்றது.

உலக வங்கியின் மதிப்பீட்டின்படி சில நாடுகளில் பெண்களுக்கு எதிரான வன்முறையானது நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 சதவீதம் வரையான செலவீனத்துக்கு காரணமாகி யுள்ளது. இதனால் பல குடும்பங்களின் சம்பாதிக்கும் திறன் பாதிக்கப்படுகின்றது என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட நாடுகளில் வாழும் 37 சதவீதமான பெண் கள் தங்கள் வாழ்க்கையில் தங்களது நெருங்கிய நண்பர்களால் உடல் அல்லது பாலியல் வன்முறையை அனுபவித்திருக் கிறார்கள் என்றும் இது இந்த நாடுகளில் 2 இல் 1 என்ற அளவுக்கு அதிகமாக உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கையில் 5 இல் 1 (20.4சதவீதம்) பெண்கள் தங்கள் வாழ்நாளில் ஒரு நெருங்கிய துணையால் பாலியல் மற்று ம் உடல்ரீதியான வன்முறையை அனுபவித்திருக்கிறார்கள்.

இலங்கையில் 4 பெண்களில் 1 பெண் (24.9சதவீதம்) 15 வயதிலிருந்து பாலியல் அல்லது உடல்ரீதியான வன்முறையை அனுபவித்துள்ளனர் என்று யுனிசெப் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ள நாடாக இலங்கை மாறியுள்ளது. இணையத்தள வர்த்தக பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் என்பன அதிகம் இடம்பெறும் நாடாக இலங்கை மாறி யுள்ளது. இது முந்தைய ஆண்டுகளை விட அதிகம் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

2020ஆம் ஆண்டில் 1,292 பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கு கள் பதிவாகியுள்ளதாக தேசிய குழந்தை கள் பாதுகாப்பு ஆலோசனை சபை வெளியிட்ட அறிக்கையில் தெரியவந் துள்ளது. 2021 இல், 1,304 வழக்குகள் பதிவாகியுள்ளன.

2020இல் 1,292 வழக்குகளில் ஒன்பது மட்டுமே தீர்க்கப்பட்டுள்ளன. 2021இல், குறைவான வழக்குகள் கூட தீர்க்கப்பட்டன. அதே ஆண்டில், குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 26 வழக்குகள் இருந்தன, ஆனால் ஒரு வழக்கு மட்டுமே தீர்க்கப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில் சமத்து வம் என்பது எவ்வாறு சாத்தியப்பட போகின்றது.

வன்முறைகளுக்கு எதிராகவும் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவும் தொடர்ச்சியாகக் குரல் கொடுக்கப் பட்டே வருகின்றது. எனினும் துஷ்பிர யோகங்கள் குறைந்ததாக இல்லை. தொடரவே செய்கின்றன. சட்டக்கட்ட மைப்புகள் வலுவாக இருந்தும்கூட பெண், சிறுமி என யுவதி ஏன் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின் றாள்.

உலகத்திலும் இலங்கையிலும் அதிகரித்துக் காணப்படுகின்ற பெண்க ளுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்த வேண்டும் என்கின்றார் சிரேஷ்ட சட்டத்தரணி மோஹன ராஜன்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

"தரவுகளுக்கு அப்பால் எந்தவித முறைப்பாடுகளும் இல்லாமல் பதிவுகள் இல்லாமல் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்றே வருகின்றன.

குறிப்பாக 18 வயதுக்கு உட்பட்ட பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைகள் மிக அபரிவிதமாக அதிகரித்து காணப்படுகின்றது.

அதற்கு அப்பால் தொழில் செய்யக்கூடிய பெண்கள், வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்லும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இலங்கையில் நீதவான் நீதிமன்றம், மேல் நீதிமன்றங்களில் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பிலான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன.

இலங்கையில் காணப்படுகின்ற குற்றவியல் நடவடிக்கை தொடர்பான முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமான தாகும்.

இந்த முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக பெரும் பாலான முறைப்பாடுகள் பதிவு செய்யப்படாமல் காணப்படுகின்றன.

அதற்கு அப்பால் குற்றங்களுக்கு வழங்கப்படக்கூடிய தண்டனைகளும் குற்றங்களை விசாரிப்பதில் ஏற்படக் கூடிய தாமதங்களும் விசாரணைகளின் போது பெண்கள் எதிர்கொள்ளக்கூடிய அசௌகரியங்கள் மற்றும் இடைஞ் சல்களும் குற்றங்கள் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளன.

எனவே பெண்கள் தொடர்பான சட்டக் கட்டமைப்புகள் மறுசீரமைக் கப்பட வேண்டியது அவசியமாகும்" என்று அவர் வலியுறுத்துகின்றார்.

எனவே பெண்களுக்கான சட்டக் கட்டமைப்புககள் கூட இன்னும் நலி வுற்றதாகவே காணப்படுகின்றன. இதுவே வன்முறைகள் அதிகரிப்பதற்கும் காரணியாக அமைந்துள்ளது. எனவே சட்டக்கட்டமைப்புக்களில் கூட மாற்றங் கள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகியுள்ளது.

தாய்மையை கூறி பெண்ணை முடக்குவது நிறுத்தப்பட வேண்டும். கலாசார மங்கையாக வர்ணித்து பெண்ணின் கரங்கள் கட்டப்படுவது நிறுத்தப்பட வேண்டும். போகப்பொ பாருளாகவும் இச்சைகளை தீர்த்துக்கொள்வதற்கான இயந்திரங்க ளாகவும் பெண்ணை பார்ப்பது நிறுத்தப்பட வேண்டும்.

ஆண் சமூகத்துக்கு மத்தியில் பெண் குழந்தையை பாதுகாப்பாக விட்டுச் செல்லலாம் என்ற நம்பிக்கை கட்டி யெழுப்பப்பட வேண்டும்.

ஒரு பெண்ணை சக மனிதியாக பார்க்கும் நிலைமை என்று உருவாகின்றதோ அன்றே சமத்துவம் என்ற வார்த்தை அர்த்தமுள்ளதாக மாறும்.

# அரசாங்கத்தை ஜனநாயகத்தை நோக்கி தள்ளும் உயர்நீதிமன்றம்



கலாநிதி ஜெகான் பெரேரா

பொருளாதாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதன்மையான இலக்காகக் கொண்டிருக்கும் பருநிலை உறுதிப்பாட்டை நோக்கிய நகர்வுக்கான அறிகுறிகளை காண்பிக்கத் தொடங்கியிருக்கிறது.இவற்றில் தெளிவாக காணக்கூடியதாக இருப்பது அமெரிக்க டொலருக்கும் ஏனைய சர்வதேச நாணயங்களுக்கும் எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பாகும்.இந்த அதிகரிப்பு பெறுமதி குறைந்துகொண்டு வந்த முன்னைய போக்கில் இருந்து ஒரு மாற்றத்தை குறிக்கிறது.

கடந்த ஒரு வருடமாக உத்தியோக பூர்வ நாணயப் பரிமாற்ற வீதத்தில் டொலரின் பெறுமதி 80 சதவீதமளவுக்கு உயர்ந்தது.கறுப்புச் சந்தையில் இந்த வீதம் மேலும் கூடுதலானதாக இருந்தது. சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட மேம்பாடு உட்பட வெளிநாட்டு நாணய சம்பாத்தியத்தில் காணப்படும் உயர்வே ரூபாவின் பெறுமதி அதிகரிப்புக்கு காரணமாகும். ஆனால் அந்த அதிகரிப்பு இன்னமும் இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் வங்குரோத்து நிலை பிரகடனத்தின் விளைவாக வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்துவதில் இடைநிறுத்தம் ஆியவற்றிலேயே தங்கியிருக்கிறது.

பெரிதும் தாமதமாகும் சர்வதேச்நாணய நிதியத்தின் 290 கோடி டொலர்கள் கடனுதவி இறுதியில் வரவிருக்கிறது என்ற அரசாங்கத்தின் ஊர்ஜிதம் நம்பிக்கையை அதிகரிக்கும் ஒரு விடயமாகும். இதை விட உலக வங்கியுடனான நாணயப் பரிமாற்றத்தின் மூலம் 40 கோடி டொலர்களும் கிடைக்கவிருக்கிறது. இவையெல்லாம் பொருளாதாரத்தின் நேர்மறையான நோக்கின் குறிகாட்டிகளாகும். பருநிலை உறுதிப்பாட்டை அடைவதற்கான அரசாங்கத்தின் மூலோபாயம் நாட்டுக்கு பயன்தரத் தொடங்கியிருக்கிறது என்பதை இது காட்டுகிறது.

ஆனால் பருநிலை பொருளாதார மீட்சி பரந்தளவில் சனத்தொகைக்கு பயனைத் தருவதாக இருக்கவேண்டுமேயன்றி உயர்ந்த வருமானம் பெறும் பிரிவினரின் ஏகபோகத்துக்குரியதாக அமைந்துவிடக்கூடாது என்பதை அரசாங்கம் மனதிற் கொள்ளவேண்டும்.சுதேச உள்ளீடுகள் மற்றும் பயன்விளைவுகளை அடிப்படையாகக்கொண்ட நிலைபேறான பொருளாதார மீட்சி முறைமையொன்றை முன்னெடுக்கவேண்டிய தேவை இருககிறது.

ஒரு நலன்வாய்ந்த சமுகமும் அதை அடைவதற்கான பொருளாதாரத் திட்டமும் அடிமட்ட மக்களைப் பாதுகாப்பதாக இருக்கவேண்டும்.கடந்த வார இறுதியில் நான் ஒரு மரணச்சடங்கில் கலந்து கொண்டேன்.இறந்தவர் 80 வயதையும் தாண்டியவர் போன்று காணப்பட்டார். ஆனால் அவரின் உண்மையான வயது 63.மரணத்துக்கு காரணம் புற்றுநோய். அவருக்கு புற்றுநோய் இருப்பதாக முதலில் கண்டுபிடிக்கப்பட்டபோது அரசாங்க புற்றுநோய் வைத்தியசாலையில் கெமோதெராபி மருந்துகள் இருக்கவில்லை.பொருளாதார வசதிகுறைந்த மக்களுக்காகவே அந்த வைத்தியசாலை இருக்கிறது.

இறந்தவர் மிகவும் உறுதியானவராக இருந்ததாகவும் நோயின் ஆரம்பத்தில் கெமோதெராபியுடன் அவரால் நலமாக இருந்திருக்கமுடியும் என்று அவரின் குடும்பத்தவர்கள் கூறினர். பல மாதங்கள் கழித்து கெமோதெராபி மருந்துகள் கிடைக்கப்பெற்றபோது நோயாளி மிகவும் பலவீனமடைந்துவிட்டார்.புற்றுநோயும் பரவிவிட்டது.பலவீனப்பட்டுவிட்ட அவரின் உடல் செறிவுகூடிய மருந்துகளுக்கு ஈடுகொடுக்க முடியாததாகிவிட்டது.இறுதியில் குடும்பத்தினர் இழப்பை தாங்கிக்கொள்ளவேண்டியதாயிற்று.

**முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு**

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் தயக்கம் இப்போது தெளிவாக தெரிய வந்துவிட்டது.மேற்கூறப்பட்ட மரணத்தைப் போன்று எண்ணற்ற கதைகள் இருப்பதை அரசாங்கம் நன்றாக அறியும்.கணிசமான



பொருளாதார மீட்சி அறிகுறிகளை மக்களுக்கு காண்பித்துவிட்டு தேர்தலுக்கு போவதையே அரசாங்கம் விரும்பும் . பெரும்பாலான வாக்காளர்கள் வசதியானவர்கள் அல்ல, வறியவர்களே.வசதியானவர்களை விடவும் வறியவர்களுக்கு இடர்பாடுகளைக் கொடுக்கின்ற ஒரு பொருளாதாரக் கொள்கையைக் கொண்ட அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கவே அவர்கள் விரும்புவார்கள்.

அதனால் உள்ளூராட்சி தேர்தல்களுக்கு 1000 கோடி ரூபாவை செலவிடுவதை விடவும் அதே பெறுமதியான அரிசியை மக்களுக்கு இலவசமாக கொடுக்க அரசாங்கம் விரும்பியிருக்கிறது.மக்கள் தங்கள் சொந்த சம்பாத்தியத்தில் வாழ்வதற்கு ஏதுவாக அவர்களை வலுவூட்டுவதற்கு அரசாங்கத்தின் உதவியில் தங்கியிருக்கும் கலாசாரத்தில் விடுபடவேண்டிய தேவை இருக்கிறது.தேர்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட மார்ச் 9 அரசாங்கத்தைப் பொறுத்தரை மிகவும் சீக்கிரமான திகதியாகும்.அதனால் தேர்தல்கள் பின்போடப்படுவதை அது உறுதிசெய்தது.

2023 பட்ஜெட்டில் தேர்தல் நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்காமல் தடுத்துவைக்கக்கூடாது என்று கடந்தவாரம் உயர்நீதிமன்றம் நிதியமைச்சின் செயலாளருக்கும் சட்டமா அதிபருக்கும் இடைக்கால தடையுத்தரவு ஒன்றைப் பிறப்பித்தது.இந்த நேரத்தில் அல்லது சீக்காரமாக எந்த நேரத்திலும் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தப்படமாட்டாது என்ற நிலைப்பாட்டில் இருந்து அவமானப்படாத முறையில் பின்வாங்குவதற்கான ஒரு வாய்ப்பை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசாங்கத்துக்கு வழங்கியிருக்கிறது.

நிதியமைச்சு உடனடியாகவே தேர்தல்களை நடத்துவதற்கு வசதியாக தேவையான நிதி ஒதுக்கீட்டை அரசாங்கம் விடுவிக்கும் என்று ஒரு அறிக்கையை வெளியிட்டது.தேர்தல்களுக்கான புதிய திகதி தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு எடுக்கக்கூடிய தீர்மானத்துக்கு செவிமடுப்பதற்கு அரசங்கத்துக்கு இப்போது வழி திறந்துவிடப்பட்டிருக்கிறது. புதிய திகதியை நிர்ணயிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட சகல பல தரப்பினருடனும் கலந்தாலோசிக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த தீர்ப்பை வழங்குவதில் இதே போன்ற பிரச்சினையை கையாளவேண்டியிருந்த பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்று வசதியாக அமைந்திருக்கக்கூடும்.நிதி வளங்கள் இல்லாமையால் மாகாண தேர்தல்களை நடத்தமுடியவில்லை என்று பாகிஸ்தான் அரசாங்கம் கூறியது. மாகாண சட்டசபைகள் கலைக்கப்பட்ட திகதியில் இருந்து 90 நாட்களுக்குள் தேர்தல்கள் இடம் பெற வேண்டும் என்று பாகிஸ்தான் நீதிமன்றம் காலக்கெடு விதித்தது.

நிதி இல்லை என்பதை காரணம் காட்டி அரசாங்கம் ஒன்று தேர்தல்களைப் பின்போட அனுமதித்தால் அது ஆபத்தான முன்னுதாரணம் ஒன்றை ஏற்படுத்திவிடும் என்று இலங்கையில் உள்ளதைப் போன்றே பாகிஸ்தானிலும் அக்கறை இருந்தது. பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற அபிவிருத்திய டைந் துவரும் நாடுகள் நிதி வளங்கள் பற்றாக் குறையை தொடர்ந்து எதிர்நோக்குவதால் தோல்வியைச் சந்திக்கவேண்டிவரும் என்று அரசாங்கம் கருதுகின்ற தேர்தல் ஒன்றை பின் போடுவதற்கு Path நேரத்திலும் நிதிப்பற் றாக்குறையை காரணமாக காண்பிக்க முடியும்.

இரு நாடுகளிலுமே நடத்தப்படவேண்டியிருப்பவை பாராளுமன்ற தேர்தல்கள் அல்ல, அடுத்த மட்டத்திலான தேர்தல்களே என்பது கவனிக்கத்தக்கது. மக்களின் கவனத்தில் இல்லாவிட்டாலும் கூட இலங்கையில் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நான்கு வருடங்களுக்கும் அதிகமான காலமாக பின்போடப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளிலுமே இந்த தேர்தல்களில் அரசாங்கத்துக்கு கடுமையான தோல்வி ஏற்பட்டால் முன்கூட்டியே பாராளுமன்ற தேர்தலை நடத்தவேண்டும் என்ற கோரிக்கை எழும் என்ற ஐயம் இருக்கிறது. சட்டப்படி அவ்வாறு செய்ய வேண்டும் என்றில்லை. இலங்கையில் சட்டப்படி தற்போது நடத்தப்படவேண்டியிருக்கும் உள்ளூராட்சி தேர்தல்களைப் போலன்றி பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னும் இரண்டு வருடங்களுக்கும் கூடுதலான காலம் இருக்கிறது. அதனால்தான் ஜனாதிபதி விக்கிரமசிங்க உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகளினால் அல்ல பாராளுமன்ற தேர்தலின் முடிவுகள் மாத்திரமே அரசாங்கத்தை மாற்றமுடியும் என்று கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

**ஜனாதிபதியின் தெரிவுகள்**

கடந்த ஒரு வருட காலமாக மக்கள் முகங்கொடுத்துவரும் பொருளாதார இடர்பாடுகளின் விளைவாக தற்போதைய தருணத்தில் அரசாங்கம் மோசமான தேர்தல் தோல்வியொன்றை சந்திக்கக்கூடிய வாய்ப்பே இருக்கிறது. சட்டப்படி பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னும் இரண்டரை வருடங்கள் இருக்கின்ற போதிலும் உள்ளூராட்சி தேர்தல்களில் அரசாங்கத்துக்கு ஏற்படக்கூடிய தோல்வி அதை பதவிவிலகுமாறு எதிர்க்கட்சிகள் கோரும் சூழ்நிலைக்கு வழிவகுத்து வீதிப் போராட்டங்களும் மூளக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

அதன் காரணத்தினால்தான் அரசாங்கத்தை மாற்றுவதற்கான எந்த முயற்சியும் பாராளுமன்ற தேர்தல் போன்ற உகந்த வழிமுறைகளின் ஊடாக முன்னெடுக்கப்படவேண்டும் என்பது முக்கியமானது என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க சொல்லவேண்டியேற்பட்டது.பாராளுமன்றத்துக்கு பதிலாக வீதிகள் ஒரு தெரிவு அல்ல. ஏற்றுக்கொள்ளப்பட்ட செயன்முறைகளை சீர்குலைப்பதற்கான எந்த முயற்சியுமே இலங்கையின் அரசியலமைப்பையும் சட்டத்தின் ஆட்சியையும் மீறுவதாக அமையும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்ற தேர்தல் ஒன்றின் மூலமாக மாத்திரமே அரசாங்கத்தை மாற்றமுடியும் என்ற ஜனாதிபதியின் கூற்று உள்ளூராட்சி தேர்தல்களில் ஆளும் கட்சிக்கு தோல்வியடைந்தாலும் கூட பாராளுமன்ற தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படப்போவதில்லை என்ற எச்சரிக்கையேயாகும். உள்ளூராட்சி தேர்தல்களில் தோல்வியடைந்த போதிலும் அரசாங்கங்கள் வீழ்ச்சியடையாமல் சட்டப்படி அடுத்த பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படும் வரை பதவியில் தொடர்ந்து இருந்ததற்கு கடந்த கால உதாரணங்கள் இருக்கின்றன.

2018 பெப்ரவரி உள்ளூராட்சி தேர்தல்களில் அன்றைய அரசாங்கம் படுதோல்வி கண்டது. ஆனால் அந்த பாராளுமன்றத்தின் பதவிக்காலம் நிறைவடையும் வரை அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருந்தது.2020 ஆகஸ்டிலேயே பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே அந்த தேர்தலில் அரசாங்கம் படுதோல்வி கண்டது.இப்போது கூட ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடியும் வரை அதிகாரத்தில் இருக்க உறுதிபூண்டிருப்பதாக தெரிகிறது.

2018 பெப்ரவரி உள்ளூராட்சி தேர்தல்களில் தோல்வி கண்ட அரசாங்கத்துக்கு பிறகு நேர்ந்த கதி தனக்கு ஏற்படுவதை தவிர்ப்பதே இன்றைய அரசாங்கத்துக்கு இருக்கும் சவாலாகும். 2018 ஆம் ஆண்டில் விக்கிரமசிங்க பிரதமராகவே பதவியில் இருந்தார். ஆனால் இப்போது அவர் உச்சபட்ச அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியாக இருக்கிறார். இதுவே அன்றைய சூழ்நிலைக்கும் இன்றைய சூழ்நிலைக்கும் இடையிலான வித்தியாசம். தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தில் இரண்டரை வருங்கள் நிறைவடைந்த நிலையில் தனது விருப்பப்படி எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தை கலைக்கக்கூடிய அதிகாரத்தை பெற்றிருக்கிறார்.

தற்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தாங்கள் தோல்வியைச் சந்திக்கக்கூடிய தேர்தலுக்கு முகங்கொடுக்க ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்பப்போவதில்லை என்பதால் அவர்கள் ஜனாதிபதிக்கு பணிந்தவர்களாக நடந்துகொள்வதற்கான சாத்தியமே இருக்கிறது.

அதனால் ஜனாதிபதி மனதிற்கொண்டுள்ள இரு விவகாரங்களில் அவர் தனது அதிகாரத்தை முழுமையாக செலுத்தக் கூடிய சந்தர்ப்பம் கிட்டியிருக்கிறது. ஒன்று இலங்கையின் பொருளாதார மீட்டெடுப்பு. மற்றையது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது. இவற்றுக்கு பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெறுவதில் அவர் அக்கறை செலுத்துகிறார். ●

# அக்கரைப்பற்று, கண்ணகி கிராமத்தில் யானைகளின் அச்சுறுத்தல் அதிகரிப்பு

அம்பாறை, மார்ச் 08

அம்பாறை - அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கவடாப்பிட்டி மற்றும் கண்ணகி கிராமத்தில் யானையின் அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில், மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடுவதற்கும் தயாராகி வருகின்றனர்.

கவடாப்பிட்டி கிராமத்தில் உள்நுழைந்த யானை, வீடொன்றை உடைத்து, அங்கிருந்த நெல் மூடைகளையும் இழுத்துச் சென்றுள்ளது.

அன்மைக்காலமாக கவடாப்பிட்டி மகாசக்திபுரம், கண்ணகி கிராமம் உள்ளிட்ட அயலில் உள்ள சிறு கிராமங்களிலும் யானையின் தொல்லை அதிகரித்து வருகின்றது. இதனால் அங்கு வாழும் மக்களும் விவாசாய செய்கையில் ஈடுபடும் விவசாயிகளும் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்னர் கண்ணகி கிராமத்தில் யானையின் தாக்குதலுக்குள்ளான பெண்ணொருவர் பலியானதுடன், வயல் பிரதேசத்தில் ஆண் ஒருவரும் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

யானையின் தாக்குதலை கட்டுப்படுத்த இராணுவத்தினரின் உதவியுடன் பொதுமக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களை இணைத்து குழுவாக பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது எனவும் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் முடிவெடுக்கப்பட்டதுடன், குறித்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் யானை பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில், அரசியல்வாதிகளின் கவனத்துக்கு கொண்டு சென்று, அரசாங்கத்தின் உதவியை பெறுவது எனவும் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

ஆனாலும், அரசாங்கமோ எந்தவோர் அரசியல்வாதிகளோ இதுவரையில் உரிய நடவடிக்கை எடுக்காத நிலையில், தொடர்ந்தும் யானையின் அச்சுறுத்தல் இடம்பெற்று வருவதுடன், ஒற்றைக்கண் யானை ஒன்றே இவ்வாறு தொடர் சேதங்களை ஏற்படுத்தி வருவ தாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

ஆகவே, குறித்த யானையை வெளியேற்ற வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இல்லாத பட்சத்தில் தாங்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைவரும் எனவும் தெரிவித்தனர். (அ)

# கனடாவிலிருந்து பணம் பெற்று வாள்வெட்டில் ஈடுபட்டவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 08

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிப்புலம் ஐயப்பன் கோவில் பகுதியில் கடந்த பெப்ரவரி 26ஆம் திகதி ஒருவர் வாள் வெட்டில் காயமடைந்தார். அத்துடன், அவரின் காரையும் சேதப் படுத்திவிட்டு தப்பிச் சென்ற நால்வர் அடங்கிய கும்பலில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப் புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினரே நேற்று செவ்வாய்க்கிழமை சந்தேக நபரை கைது செய்தனர்.

சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணையில் கனடாவிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் பணம் அனுப்பப்பட்டு இந்தத் தாக்குதல் மேற்கொள் ளப்பட்டுள்ளது என தெரியவந்துள்ளது.

பனிப்புலம் மற்றும் சங்கானை பகுதியைச் சேர்ந்தவர்களே இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து வாள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## தங்கத்தின் விலை மேலும் வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 08

அமெரிக்க டொலரின் விலை வீழ்ச்சி காரணமாக தங்கத்தின் விலை குறைவடைந்து வருகின்றது. இந்த நிலையில் நேற்று 22 கரட் தங்கப் பவுண் ஒன்று ரூ. ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 500 ஆகவும், 24 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை ரூ. ஒரு இலட்சத்து 66 ஆயிரம் ஆகவும் வீழ்ச்சி அடைந்திருந்தது.

# 2 மாதங்களில் சுற்றுலாத்துறையால் 330 மில்லியன் டொலர் வருமானம்!

கொழும்பு, மார்ச் 08

இந்த வருடத்தின் கடந்த இரண்டு மாதங்களில் சுற்றுலாத்துறை மூலம் 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளன.

கடந்த மாதம் மட்டும் 170 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக வருடத்தின் முதல் இரு மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# வெளிநாட்டவரின் கமெரா உபகரணங்களை திருடிய வனவிலங்கு கண்காணிப்பாளர் கைது

கொழும்பு, மார்ச் 08

வெளிநாட்டுப் பெண் ஒருவரின் 24 இலட்சம் ரூபா பெறுமதியான கமெரா உபகரணங்கள் திருடப்பட்டதாகக் கிடைத்த முறைப்பாட்டின் பேரில் வனவிலங்கு கண்காணிப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார் என கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணியான குறித்த பெண் தனது தோழியுடன் கடந்த மாதம் 22ஆம் திகதி இலங்கைக்கு வந்துள்ளார்.

கடந்த 05 ஆம் திகதி கதிர்காமம் பிரதேசத்திற்கு விஜயம் செய்த அவர், நேற்று முன் தினம் சபாரி ஜீப்பில் கதிர்காமம் புத்தல வீதிக்கு விஜயம் செய்துள்ளார்.

முறைப்பாட்டின்படி, குறித்த பெண் மலசலகூடத்தை பயன்படுத்துவதற்காக கல்கே வனவிலங்கு கண்காணிப்பு நிலையத்துக்கு சென்ற வேளையில் கமெரா உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான முறைப்பாட்டின் அடிப்படையில் கல்கே வனவிலங்கு காவல் நிலையத்தில் பணிபுரியும்

கல்வி tv CHANNEL-1

**08.03.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**08.03.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# உப்புவெளி பஸ் டிப்போவின் ஊழியர் பணிப்புறக்கணிப்பு



திருமலை, மார்ச் 08

திருகோணமலை உப்புவெளியில் உள்ள பஸ் டிப்போ முன்பாக ஊழியர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சாரதிகள் இடமாற்றம் மற்றும் நிர்வாக தொடர்பாக பலதரப்பட்ட அதிருப்தியான காரணங்களை முன்வைத்து தற்போதுள்ள முகாமையாளரை நீக்கி, தகுதியான முகாமையாளரை நியமிக்குமாறு கோரி திருகோணமலை உப்புவெளியில் உள்ள பஸ் டிப்போ முன்பாக ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் நேற்று பஸ் டிப்போவில் இருந்து எந்த பஸ்களும் பணியில் ஈடுபடவில்லை.

(அ)

# விசேட அதிரடிப்படையினரிடம் சிக்கினார் போதை வியாபாரி

மட்டக்களப்பு, மார்ச் 08

காத்தான்குடி கடற்கரை வீதியில் மோட்டார் சைக்கிளில் 4 கிராம் 770 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளை எடுத்துச் சென்ற வியாபாரி ஒருவரை விசேட அதிரடிப்படையின் நேற்று முன் தினம் இரவு மடக்கிப்பிடித்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரையும் ஐஸ் போதைப் பொருள் மற்றும் மோட்டர் சைக்கிளுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

(அ)

# நாட்டில் சிங்கள ஆட்சியாளர்களிடம் பொறி உண்டு; பொறிமுறை இல்லை!

முன்னாள் எம்.பி. சிறிநேசன் சுட்டிக்காட்டு



நிந்தவூர் மார்ச். 08

**“சிங்கள ஆட்சியாளர்களிடம் பொறி இருக்கிறது, பொறிமுறை இல்லை. ஏமாறுவது தமிழர்களின் வரலாறாக அமையக்கூடாது.”**

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.சிறிநேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இலங்கையில் இனவாத மதவாத பொறிகள் உள்ளன. இன நல்லிணக்கம், இனப் பிரச்னை தீர்வுக்கான உள்நாட்டுப் பொறிமுறை இல்லை. இதுதான் சிங்கள அதிகார வர்க்கத்தினரின் 75 ஆண்டுகள் கால கறைபடிந்த வரலாறாகவுள்ளது. அப்படியாக வரலாறு உள்ள போது இல்லாத உள்நாட்டுப் பொறிமுறையை தமிழ் மக்கள் நம்ப முடியாது. அண்மையில் இலங்கை மனித உரிமை ஆணையம் ஜனாதிபதியிடம் அறிக்கை அளித்துள்ளதாக அறிய முடிகின்றது. அதாவது நல்லிணக்கத்துக்கான உள்நாட்டுப் பொறிமுறை யை வடக்கு மக்கள் நம்புவதாகக் கூறப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் சிங்கள ஆட்சியாளர்களின் அடிப்படைவாதச் செயற்பாடுகள் பற்றி நன்கறிவார்கள். சிங்கள ஆட்சியாளர்களிடம், இனவாத மதவாத வக்கிரமான பொறிகள் உள்ளன என்பதை தமிழர்கள் பட்டறிவு மூலமாக மேலும் நன்கறிவார்கள். அப்படியாக உள்ள வடமாகாணத் தமிழ் மக்கள் சிங்கள ஆட்சியாளர்களின் உள்ளகப் பொறிமுறையை நம்பவே வாய்ப்பில்லை. எனவே மனித உரிமை ஆணைக்குழு ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கையை தமிழர்கள் நம்ப மாட்டார்கள்.

சிங்கள ஆட்சியர்களிடம் இனவாதம், மதவாதம், பேச்சு வார்த்தை, சமாதான ஒப்பந்தம், உடன்பாடு போன்ற பொறிகள் உள்ளன. அவற்றின் மூலமாக தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள், பலவீனமாக்கப்பட்டார்கள், வீழ்த்தப்பட்டார்கள் என்பதுதான் வரலாறுகளாகும்.

பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், திம்புப்பேச்சு வார்த்தை, சர்வகட்சி மாநாடு, நோர்வே அனுசரணையில் அமைந்த சமாதான ஒப்பந்தம் என்பன பொறிகளாக அமைந்து தமிழர்களை வீழ்த்தின, ஏமாற்றங்களைக் கொடுத்தன.

மொத்தத்தில் இந்நாட்டில் அடிப்படைவாதப் பொறிகள் இருக்கின்றனவே தவிர இன நல்லிணக்கத்துக்கான தீர்வுக்குரிய உள்நாட்டுப் பொறிமுறைகள் எவையும் இல்லை என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

இவையெல்லாம் 75 ஆண்டுகளில் சிங்களத் தலைமைகள் கற்றுத் தந்த கசப்பான வரலாற்றுப் படிப் பினைகளாகும். இதனால்தான் தமிழ் மக்கள் சிங்கள ஆட்சியாளர்களின் உள்நாட்டுப் பொறிமுறைகளை முற்றாக நிராகரிக்கின்றனர். இது தமிழர்களின் தவறல்ல, சிங்கள ஆட்சியாளர்களின் வரலாற்றுத் தொடர் தப்புகளாகும்.

ஏமாற்றுவது சிங்கள இராஜதந்திரம் என்றால் ஏமாறுவது தமிழர்களின் வரலாறாக அமையக்கூடாது-என்றார்.

(அ-06)

# அலுவலக ஊழியர்களின் நன்மை கருதி இராணுவ சோதனை சாவடிகள் அகற்றல்

அம்பாறை, மார்ச் 08

நிந்தவூர் இளைஞர் தன்னார்வ அணியின் வேண்டுகோளின் பிரகாரம், நிந்தவூர் பிரதான வீதியிலும், அக்கரைப்பற்று அம்பாறை பிரதான வீதியிலும் அமைந்துள்ள இராணுவ சோதனைச் சாவடியை, வார நாட்களில் காலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை அகற்றுவதற்கு இராணுவத்தின் 24 ஆம் காலாட் படைப்பிரிவின் கட்டளைக் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி அனுமதி வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை, மல்வத்தையில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் 24 ஆம் காலாட் படைப்பிரிவின் இராணுவ முகாமில் நடைபெற்ற சிநேகபூர்வ சந்திப்பின்போதே கட்டளைக் தளபதியினால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இந்த பிரதான வீதியின் ஊடாக அதிகமான உத்தியோகத்தர்கள் காலை வேளையில் அலுவலகங்களுக்குச் செல்வதினால், பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருவதுடன், இந்த சோதனைச் சாவடியில் தரித்து நிற்கும் நேரம் அலுவலக கடமைக்கு தாமதமாக கைவிரல் அடையாளப் பதிவு செய்ய வேண்டிய அசௌகரியமான நிலைமைக்கு ஆளாகி வருகின்றனர்.



இந்த விடயம் பற்றி நிந்தவூர் இளைஞர் தன்னார்வ அணியின் செயற்பாட்டாளர்களான சுலைமான் றாபி மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறைப் பணிப்பாளர் சபை உறுப்பினரும், கிழக்கு மாகாண ஆளுநரின் ஆயுர்வேத துறைக்கான இணைப்பாளருமான சுலைமான் நாசிறூன் ஆகியோர், இலங்கை இராணுவத்தின் 24 ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து, குறித்த வீதிகளிலுள்ள இராணுவ வீதிச் சோதனைச் சாவடிகளை அகற்ற அனுமதி வழங்கப்பட்டு நேற்று அவைகள் அகற்றப்பட்டன.

(அ)

# மாமனிதர் கிட்ணன் சிவநேசனின் 15ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு

மட்டக்களப்பு, மார்ச் 08

படுகொலை செய்யப்பட்ட யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கிட்ணன் சிவநேசனின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் இடம்பெற்றது.



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தல் நிகழ்வு வவுணதீவு நாவல்தோட்டம் மாரியம்மன் ஆலயத்தின் முன்னால் இடம்பெற்றது.

இதில் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாமனிதர் கிட்ணன் சிவநேசனின் திருவுருவ படத்திற்கு மாவீரர் கங்காவின் தாயாரான தம்பி போடியார் அமராவதி ஈகச்சுடர் ஏற்றியதையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் மலர் மாலை அணிவித்தார். நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் அன்னாரது ஆத்மசாந்தி வேண்டி மலர் தூவி இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தினர்.

(அ)

# ‘என் சிறகில் சிக்கிய வானம்’ நூல் வெளியீடு சனிக்கிழமை

அம்பாறை, மார்ச் 08

மரீனா இல்யாஸ் ஷாபி எழுதிய “என் சிறகில் சிக்கிய வானம்” (பயணக்கட்டுரைகளின்தொகுதி) எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை மு.ப.8.30 முதல் சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் இடம் பெறும்.

ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பின் ஏற்பாட்டில், அமைப்பின் தலைவி சம்மாந்துறை மஷூறா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பா ஹாஷிம் பா அலவி அஷ்ஷெய்க் இர்பான் மௌலானா முதன்மை அதிதியாகக் கலந்து சிறப்பிக்கிறார். ஓய்வுநிலை பல் கலைக் கழகப் பதிவாளர் கவிஞர் மன்சூர் ஏ காதிர் மற்றும் பேஜஸ் அறிவு மையத்தின் பணிப்பாளரும் ஆய்வாளருமான சிராஜ் மஷ்ஹூர் ஆகியோர் நூல் மீதான உரைகளை நிகழ்த்துகின்றனர்.

இந்நிகழ்வில், எம்.எச்.எப். நுஸைபா, எஸ்.பாத்திமா சுஹிதா ஆகியோர் கிராஅத் மொழிவதோடு, சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபரும் அமைப்பின் கணக்காய்வாளருமான றிப்கா அன்ஸார் வரவேற்புரையும் அமைப்பின் உபதலைவி ஷாமென் நிஸாம்டீன் அறிமுகவுரையையும் நிகழ்த்துவர்.

(அ)

# மட்டக்களப்பு சிறைச்சாலையில் மாபெரும் குருதிக்கொடை நிகழ்வு

மட்டக்களப்பு, மார்ச் 08

மட்டக்களப்பு சிறைச்சாலையின் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் தலைமையில் கடந்த 6ஆம் திகதி திகதி மட்டக்களப்பு சிறைச்சாலை வளாகத்தில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்தப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் நோக்கில் “உதிரம் கொடுப்போம் உயிர்காப்போம்” எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு சிறைச்சாலை, கல்முனை சிறைக்கூடம் மற்றும் கைதிகளின் நலன்புரிச் சங்கத்தினால் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இந்நிகழ்வின்போது பிரதம சிறைச்சாலை அதிகாரி டபிள்யு .எ.எஸ்.அரவிந்த, சிறைச்சாலை அதிகாரிகள், பொதுமக்கள், கைதிகளின் உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இந்தோனேசியாவில் கனமழை நிலச்சரிவில் 11 பேர் உயிரிழப்பு



ஜகார்த்தா, மார்ச் 08

இந்தோனேசியாவில் கடந்த சில தினங்களாக இடைவிடாமல் கனமழை பெய்து வருவதால் வெளிப்புற தீவுகளில் கடுமையான நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் பல வீடுகள் தரைமட்டமாகி உள்ளன. நிலச்சரிவினால் அடித்து வரப்பட்ட சேறு மற்றும் குப்பைகளால் பல வீடுகள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

ரியாவு தீவில் நிலச்சரிவில் சிக்கி இதுவரை 11 பேர் உயிரிழந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுமார் 50 பேர் வரை காணாமல் போயிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை வெள்ளம் தொடர்பான விபத்துகளில் நான்கு பேர் இறந்துள்ளனர்.

கடந்த வாரம் 41,000 பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# பாக்முட்டை பாதுகாக்கும் நடவடிக்கைகள் தொடரும்

## உக்ரைன் ஜனாதிபதி அறிவிப்பு



கீவ், மார்ச் 08

**கிழக்கு நகரமான பாக்முட்டைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் தொடரும் என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.**

மேற்கத்தேய ஆய்வாளர்கள் வார இறுதியில், ரஷ்யப் படைகள் நகரத்தை நெருங்குவதால், உக்ரைன் அதன் சில துருப்புக்களை திரும்பப் பெறலாம் என எதிர்வு கூறியிருந்தனர்.

இந்த நிலையில் பல மாதங்களாக பாக்முட்டை கைப்பற்ற முயற்சித்து வரும் ரஷ்யா, அப்பகுதியில் தற்போது வீதி துப்பாக்கிச் சூட்டுச் சண்டையில் ஈடுபட்டுவருவதாக உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் துணை மேயர் ஒலெக்சாண்டர் மார்ச்சென்கோ, வார இறுதியில் ரஷ்யா இன்னும் நகரத்தின் கட்டுப்பாட்டைப் பெறவில்லை என்று கூறினார்.

இதற்கிடையில், ரஷ்ய பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள வாக்னர் தனியார் இராணுவத்தின் தலைவர், அவரது போராளிகளுக்கும் வழக்கமான ரஷ்யப் படைகளுக்கும் இடையே வெளிப்படையான மோதலுக்கு மத்தியில் வெடிமருந்து பற்றாக்குறை இருப்பதாக முறைப்பாடு கூறினார்.

ரஷ்ய இராணுவ தலைமையகத்தில் இருந்து தனது பிரதிநிதி தடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# பறந்துகொண்டிருந்த விமானத்தின் கதவை திறக்க முற்பட்ட நபர் கைது




நியூயோர்க், மார்ச் 08

பறந்துகொண்டிருந்த விமானத்தில் கதவை திறக்க முற்பட்டதுடன், விமான ஊழியர் ஒருவரை தாக்கு முயன்ற குற்றச்சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

33 வயதான பிரான்சிஸ்கோ சேவேரோ டொரேஸ் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், லொஸ் ஏஞ்சல்ஸிலிருந்து பொஸ்டன் நகருக்குப் பறந்து கொண்டிருந்த யுனைடெட் எயார்லைன்ஸ் விமானமொன்றின் அவசரநிலைக் கதவை திறப்பதற்கு முற்பட்டார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பின்னர் இந்நபரை பயணிகளும் விமான ஊழியர்களும் மடக்கிப்பிடித்தனர். இதன்போது உடைந்த கரண்டி ஒன்றினால் விமான ஊழியர்களைத் தாக்குவதற்கு இவர் முற்பட்டார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நபர் விமானத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளதால், விமானத்தை அவசரமாக தரையிறக்க வேண்டும் என விமானியிடம் விமான ஊழியர்கள் கூறினர்

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொஸ்டன் நகரில் விமானம் தரையிறங்கியவுடன் அவர் கைது செய்யப்பட்டார்.

பிரான்சிஸ்கோ சேவேரோ டொரெஸ் விசித்திரமாக நடந்துகொண்டார் எனவும், இவ் விமானம் பறக்க ஆரம்பிப்பதற்கு முன்னரே, அவசரநிலைக் கதவு எங்கு உள்ளது என சக பயணிகளிடம் அவர் கேட்டார் எனவும் செய்தி வெளியாகியுள்ளது. (அ)

# பெருவில் கோர விபத்து!



லிமா, மார்ச் 08

தென் அமெரிக்க நாடான பெருவின் பியூரா பகுதியில் இருந்து அதன் தலைநகரான லிமாவுக்கு சென்ற பஸ் ஒன்று கோர விபத்தில் சிக்கியுள்ளது.

குறித்த இந்த பஸ்ஸில் சுமார் 50 பேர் பயணித்துள்ளனர். அன்காஷ் என்ற இடத்துக்கு அருகே பஸ் சென்று கொண்டிருந்தபோது எதிரே வேகமாக ஒரு ஓட்டோ வந்தது. அப்போது பஸ்ஸிம், ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி கொண்டன.

குறித்த விபத்தில் பஸ்ஸிம் ஓட்டோவும் தீப்பிடித்து எரிந்தன. இந்த கோர விபத்தில் 13 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

இது குறித்து தகவலறிந்த பொலிஸார் மற்றும் மீட்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர்.

விபத்தில் படுகாயம் அடைந்த 6 பேரை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (அ)

# மெக்ஸிக்கோவில் கைவிடப்பட்ட ட்ரக்கில் 343 புகலிடக் கோரிக்கையாளர்கள் மீட்பு!

மெக்ஸிக்கோ, மார்ச் 08

மெக்ஸிக்கோவின் - வெராக்ரூஸ் மாநிலத்தில் கைவிடப்பட்ட ட்ரக் வண்டியொன்றில் இருந்து 343 புகலிடக் கோரிக்கையாளர்கள் மீட்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.



அவர்களில் 103 ஆதரவற்ற சிறுவர்களும் அடங்குவதாக மெக்ஸிகோ அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ட்ரக் வண்டியிலிருந்து மீட்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் குவாத்தமாலா, ஹொண்டுராஸ், எல் சல்வடோர் மற்றும் ஈக்வடோர் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்க ளாவர்.

மீட்கப்பட்ட அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவர்கள் தங்கியிருந்த ட்ரக் வண்டியில் மின்விசிறி மற்றும் காற்றோட்ட வசதிகள் காணப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் கைவிடப்பட்டிருந்த ட்ரக் வண்டியொன்றிலிருந்து 53 புலம் பெயர்ந்தோரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு பிரித்தானியாவில் வாழ்நாள் தடை!

லண்டன், மார்ச் 08

ஆங்கில கால்வாய் ஊடாக பிரித்தானியாவுக்குள் நுழைய முயற்சிக்கும் புகலிட கோரிக்கையாளர்களுக்கு வாழ்நாள் தடை விதிக்கும் திட்டமொன்றை அரசாங்கம் முன்வைக்கவுள்ளது.

இதன்பிரகாரம், ஆங்கில கால்வாய் ஊடாக பிரித்தானியாவுக்குள் நுழைந்தவர்கள் இருந்து அகற்றப்படுவார்கள், எதிர்காலத்தில் மீண்டும் நுழைவதற்கு தடை விதிக்கப்படுவார்கள் மற்றும் புதிய சட்டத்தின் கீழ் பிரித்தானிய குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முடியாது.

முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் சிறிய படகில் பிரித்தானிய கடற்கரைக்கு வரும் எவருக்கும் பொருந்தும்.

அகதிகள் சபை, இந்த திட்டங்களை விமர்சித்துள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் இதன் விளைவாக நிரந்தரமாக இருட்டடிப்பு செய்யப்படுவார்கள் என்று அது கூறுகிறது.




படகுகள் மூலம் நுழைபவர்களை தடுத்து நிறுத்துவதை தனது முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகக் கொண்ட பிரதமர்ரிஷி சுனக், ‘எந்த தவறும் செய்யாதீர்கள், நீங்கள் சட்டவிரோதமாக இங்கு வந்தால், நீங்கள் தங்க முடியாது.’ என கூறினார்.

புதிய சட்டம் ருவாண்டா அல்லது பாதுகாப்பான மூன்றாம் நாட்டிற்கு சிறிய படகில் வருபவர்களை நியாயமான முறையில் விரைவில் அகற்றி நிரந்தரமாகத் திரும்புவதைத் தடை செய்யும் கடமையை உள்துறைச் செயலாளரிடம் முன்வைக்கும்.

தற்போது, பிரித்தானியாவுக்கு வரும் புகலிடக் கோரிக்கையாளர்கள் ஐ.நாவின் அகதிகள் மாநாடு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய மாநாட்டின் கீழ் பாதுகாப்பைக் கோரும் உரிமையைப் பெற்றுள்ளனர். (அ)

# இங்கிலாந்துடனான போட்டி; பங்களாதேஷ் ஆறுதல் வெற்றி!

சிட்டோகிராம், மார்ச் 08

இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிட்டோகிராமில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற 3ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 48.5 ஓவர்களில் 246 ஓட்டங்களுக்குச்சகல விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக ஷகீப் அல் ஹசன் 75, முஷ்பிகுர் ரகிம் 70 ஓட்டங்கள் எடுத்தனர்.

247 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 43.1 ஓவரில் 196 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக ஜேம்ஸ் வின்ஸ் 38, பில் சால்ட் 35, கிறிஸ் வோக்ஸ் 34 ஓட்டங்கள் சேர்த்தனர். பங்களாதேஷ் சார்பில் ஷகீப் அல் ஹசன் 4 விக்கெட்களை வீழ்த்தினார். 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணிக்கு இது ஆறுதல் வெற்றியாக அமைந்தது. முதல் இரு போட்டியிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்ததால் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 கைப்பற்றி கோப்பையை வென்றது.






# ஜொலித்தார் ஹெய்லி; மும்பை இலகு வெற்றி!

மும்பை, மார்ச் 08

மகளிர் பிரீமியர் லீக் இருபது - 20 தொடர் இந்தியாவில் நடக்கிறது. இதில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு எதிராக மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றியை ஈட்டியது.

சகலதுறைகளிலும் ஹெய்லி மத்தியூஸ் ஜொலித்ததாலேயே இந்த வெற்றி மும்பைக்கு இலகுவாக சாத்தியமானது.

பெங்களூர் நிர்ணயித்த 156 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய மும்பை 14.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 159 ஓட்டங்களைக் குவித்து வெற்றி பெற்றது.

ஹெய்லி மத்தியூஸ், யஸ்திகா பாட்டியா 5 ஓவர்களில் 45 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். யஸ்திகா பாட்டியாக 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின்னர் ஹெய்லி மத்தியூஸ், நெட் சிவர் - ப்றன்ட் ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 2ஆவது விக்கெட்டுக்காக 56 பந்துகளில் 114 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை வெற்றிக்கு அழைத்து சென்றனர்.

ஹெய்லி மத்தியூஸ் 38 பந்துகளை எதிர்கொண்டு 13 பௌண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 77 ஓட்டங்களையும் நெட் சிவர் - ப்றன்ட் 29 பந்துகளில் 9 பௌண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 55 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காது இருந்தனர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி. 18.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப விக்கெட்டில் அணித் தலைவி ஸ்மிருதி மந்தனா (23), சோபி டிவைன் (16) ஆகிய இருவரும் பகிர்ந்த 39 ஓட்டங்களே அணியின் அதிசிறந்த இணைப் பாட்டமாக அமைந்தது.

மத்திய வரிசை துடுப்பாட்ட வீராங்கனைகள் றிச்சா கோஷ் (28), கனிக்கா அஹூஜா (22), ஸ்ரீயங்கா பட்டீல் (23), மெகான் ஷூட் (20) ஆகியோர் பொறுப்புடன் ஆடியதால் பெங்களூர் 150 ஓரளவு போராடக்கூடிய 150 ஓட்டங்களைக் கடந்தது.

பந்துவீச்சில் ஹெய்லி மத்தியூஸ் 3 விக்கெட்களையும் சய்க்கா இஷாக், அமெலியா கேர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகியாக ஹெய்லி மத்தியூஸ் தெரிவானார். (ஐ)

# ஐ. பி. எல். இருபது - 20 லக்னோ அணிக்கு புதிய சீருடை அறிமுகம்!




ஐ. பி. எல். 2023 போட்டிக்கான லக்னோ அணியின் புதிய சீருடை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

ஐ. பி. எல். 2022 போட்டியில் புதிதாகக் களமிறங்கிய கே. எல். ராகுல் தலைமையிலான லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ், பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றது. ஐ. பி. எல். 2023 போட்டிக்கான வீரர்கள் ஏலத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் நிகோலஸ் பூரணை ரூ. 16 கோடிக்குத் தேர்வு செய்தது.

கே.எல். ராகுல், டி கொக், தீபக் ஹூடா, ஸ்ரொய்னிஸ், குருனல் பாண்ட்யா, மார்க் வுட், பிஸ்னோய், அவேஷ் கான் போன்ற பிரபல வீரர்கள் லக்னோ அணியில் உள்ளார்கள்.

இந்நிலையில் 2023 போட்டிக்கான லக்னோ அணியின் புதிய சீருடை நேற்று அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. (ஐ)




# இந்தியாவுடனான ஒருநாள் தொடர் ஆஸியின் ரிச்சர்ட்சன் விலகினார்

புதுடில்லி, மார்ச் 08

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து பிரபல வீரர் ரிச்சர்ட்சன் விலகியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2-1 என முன்னிலை வகிக்கிறது இந்திய அணி. இந்த நிலையில், இறுதி டெஸ்ட் போட்டி நாளை தொடங்குகிறது.

இதைத் தொடர்ந்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்நிலையில், அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஜை ரிச்சர்ட்சன், காயம் காரணமாக ஒருநாள் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

கடந்த ஜனவரியில் பி. பி. எல். போட்டியில் விளையாடியபோது ஜை ரிச்சர்ட்சனுக்கு கால் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதிலிருந்து மீண்டு வந்ததால் ஒரு நாள் அணியில் சேர்க்கப்பட்டார். எனினும், காயத்தால் ஏற்பட்ட பாதிப்பு மீண்டும் ஏற்பட்டிருப்பதால் தற்போது ஒருநாள் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

மேலும், ஐ. பி. எல். தொடரிலும் ரிச்சர்ட்சனால் விளையாடுவது சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. ஐபிஎல் ஏலத்தில் ரிச்சர்ட்சனை 1.50 கோடி இந்திய ரூபாய்க்கு மும்பை அணி வாங்கியது. (ஐ)

# தென்னாபிரிக்க அணியில் பிளசிஸை சேர்க்க பேச்சு!

கேப்டவுன், மார்ச் 08

இருபது -20 தொடரில் சிறப்பாக விளையாடி வரும் தென்னாபிரிக்க வீரர் டு பிளசிஸை அணியில் மீண்டும் சேர்க்க பேச்சு நடக்கிறது.

தென்னாப்பிரிக்காவின் வெள்ளைப் பந்துப் பயிற்றுநராக ராப் வால்டர் நியமிக்கப்பட்டதையடுத்து டு பிளசிஸை அணியில் சேர்ப்பதற்கான முயற்சிகள் நடக்கின்றன.

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுள்ள டு பிளசிஸ், இன்னும் வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் விளையாட ஆர்வமாக உள்ளார். 2021, 2022 இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர்களில் அவர் விளையாடவில்லை. ஆனாலும், உலகெங்கும் நடைபெறும் இருபது - 20 தொடர்களில் அவர் விளையாடி வருகின்றார்.

இந்த நிலையில், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் இயக்குநர் இனாக்,

உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னர் தெரிவுக் குழு, பயிற்றுநர் ஆகியோரிடம் டு பிளசிஸ் பற்றி பேச்சு நடைபெற்றது. ஆனால், ஒரு முடிவும் எட்டப்படவில்லை. இதுதொடர்பான பேச்சில் ஈடுபட விருப்பமாக உள்ளோம். நல்ல வழி கிடைக்கும் என நம்புகிறோம். ஒப்பந்தத்தில் இல்லாத வீரர்களுடனும் பேச்சில் ஈடுபட ஆர்வமாக உள்ளோம் - என்றார். (ஐ)







# தென்னாபிரிக்க அணியின் ரி -20 கப்டன் பவுமா நீக்கம்!

கேப்டவுன், மார்ச் 08

தென்னாபிரிக்காவின் இருபது - 20 அணியிலிருந்து பவுமா நீக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்கா சுற்றுப் பயணம் செய்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, 2 டெஸ்ட், 3 ஒருநாள், 3 இருபது -20 தொடர்களில் விளையாடுகிறது.

இந்நிலையில், இருபது - 20 தொடருக்கான தென்னாபிரிக்க அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில், தென்னாபிரிக்க இருபது - அணியின் தலைவராக மார்க்ரம் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இருபது - 20 அணியை வழிநடத்திய பவுமா தலைமைப் பதவியிலிருந்தும் அணியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார். எனினும் ஒருநாள் தொடருக்கான தலைவராக அவர் தொடர்கிறார். (ஐ)

# உள்ளூராட்சி மன்றங்களை சட்டப்படியே கையாள்வோம்

## சபையில் கூறினார் பிரதமர் தினேஷ்

கொழும்பு, மார்ச் 08

உள்ளூராட்சி மன்றங்களைச் சட்டத்தின் பிரகாரமே கையாள முடியும் என பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று செவ்வாய்க் கிழமை பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு திறைசேரிச் செயலாளரை அழைத்து கலந்துரையாடலை நடத்தவுள்ளதாகவும் அதன் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் இம்மாதம் 19ஆம் திகதி நிறைவடைந்ததன் பின்னர் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து எதிர்க் கட்சி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (அ)

# மயந்த பதவி விலகியதை அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, மார்ச் 08

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவியில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியில் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க விலகியுள்ளார்.

அவரது பதவி விலகல் கடிதத்தை பெற்றுக்கொண்டதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று செவ்வாய்க் கிழமை பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

ஆளும் கட்சியினால் பரிந்துரைக்கப்பட்ட மயந்த திஸாநாயக்க, அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

அதே நேரத்தில் எதிர்க்கட்சி கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் பெயரை அந்தப் பதவிக்கு ஏற்கனவே முன்மொழிந்திருந்தது.

இதனையடுத்து, எழுந்த சர்ச்சைகள் மற்றும் விமர்சனங்களையடுத்து, குறித்த பதவியிலிருந்து விலகுவதாக மயந்த திஸாநாயக்க அறிவித்தார். (அ)

# நாட்டை மேலும் கடன் சிக்கலுக்குள் தள்ளுவதற்கே அரசாங்கம் முயற்சி!

## விஜித ஹேரத் குற்றச்சாட்டு



**கொழும்பு, மார்ச் 08**

**நாட்டை மேலும் கடன் நெருக்கடிக்குள் தள்ளுவதற்கே அரசாங்கமானது முயற்சிக்கின்றது என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

'நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி காணப்படுகின்றது. இதனால் மக்களே அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். எனினும் அரசாங்கமானது பொருட்களின் விலையை அதிகரிக்கின்றது.

சாரதி அனுமதிப்பத்திரங்களின் கட்டணத்தை அதிகரிக்கின்றது.

அடுத்ததாக போக்குவரத்து குற்றத்துக்கான அபராதத் தொகை அதிகரிக்கப்படுகின்றது.

மக்களின் மீதே மீண்டும் மீண்டும் பொருளாதார நெருக்கடியின் சுமை சுமத்தப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளதாகக் கூறும் அரசாங்கமானது நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றி மக்களை துன்பத்துக்குள் தள்ளியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோரப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறும்போது உலக வங்கியிடம் மற்றுமொரு கடனை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கூறுகின்றார்.

மேலும் மேலும் கடனை வாங்குவதற்கே முயற்சிக்கின்றனர்.

இதனால் நாடானது மேலும் கடன் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கப்போகின்றது.

சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதால் நாட்டின் உற்பத்திபொருளாதாரம் வளர்ச்சியடையபோவதில்லை.

ஜனாதிபதியின் கூற்றுக்கு அமைவாக மேலும் ஒரு கடனை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பமே ஏற்படுகின்றது.

அதனை பெற்றுக்கொள்வதற்கும் 15 நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டி ஏற்பட்டுள்ளது.

கடைசி நிபந்தனையை நிறைவேற்றிக்கொள்ள முடியாததால் நிதி உதவி கிடைப்பது தாமதமாகினதாகக் கூறுகின்றனர்.

மின்கட்டணத்தை அதிகரிப்பதே அந்த நிபந்தனையாகும்.

கடந்த டிசெம்பர் மாதம் மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு இருந்தனர். எனினும் அதனை அரசாங்கத்தால் செய்துகொள்ள முடியாமல் போனது.

அது பெப்ரவரி மாதம் மட்டும் காலம் தாழ்த்தப்பட்டது. மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் 15 நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டன.

எனவே மின்கட்டணத்தை அதிகரித்து, வரிகளை அதிகரித்து, எரிபொருள் விலையை அதிகரித்து, அரச திணைக்களங்களை விற்பனை செய்வதனூடாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 2.9 பில்லியன் டொலர் கிடைக்கும். அதனூடாக மற்றுமொரு கடன்தொகை உலக வங்கியிடம் இருந்து கிடைக்கும்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் கிடைப்பது பாரிய விடயமல்ல. இதனூடாக நாடு மேலும் கடன் நெருக்கடிக்குள்ளேயே விழப்போகின்றது'- என்றார். (அ)

# திருகோணமலை மாவட்ட மீனவர்கள் ஆர்ப்பாட்டம்!

திருமலை, மார்ச் 08

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து திருகோணமலை மாவட்டத்தினை சேர்ந்த சிறு வலைகள் மற்றும் தூண்டில்கள் மூலமாக மீன்பிடியிலீடுபடுவோர் நேற்று செவ்வாய்க் கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் தேசிய மீனவப் பெண்கள் சம்மேளனம் ஆகியன ஏற்பாடு செய்த குறித்த போராட்டத்தில் திருகோணமலையைச் சேர்ந்த மீனவக் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.



நாட்டில் காணப்படும் பொருளாதாரச் சுமை, எரிபொருள் விலையேற்றம், மின் மற்றும் நீர்ப்பட்டியல்களின் விலையேற்றம் என்பவற்றுக்கு அரசு உடனடியாக தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கையெழுத்திடப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய மஹஜர் ஒன்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு பேரணியாக சென்ற மீனவ சமூகத்தினரால் ஆளுநரின் செயலாளரிடம் வழங்கப்பட்டது. (அ)

# இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு சீன ஆதரவு மீண்டும் உறுதியாகியது

கொழும்பு, மார்ச் 08

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவியை பெறுவதில் உள்ள தடையை நீக்கி, இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவளிப்பதாக சீனா மீண்டும் உறுதியளித்துள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய இருதரப்பு கடன் வழங்குநராக உள்ள சீனா, எக்ஸிம் வங்கி ஊடாக கடன் மறுசீரமைப்புக்கான எழுத்து மூலமான ஆதரவை வழங்கியுள்ளதாக ப்ளூம் பேர்க் தெரிவித்துள்ளது.

2.9 பில்லியன் டொலர் பெறுமதியான கடனுதவியை பெற்றுக்கொள்வதற்கான இந்த உத்தரவாத கடிதம் சர்வதேச நாணய நிதியத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னதாக சர்வதேச நாணய நிதியத்தால் அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகை இம்மாதத்திற்குள் கிடைக்கும் என ஜனாதிபதி உள்ளிட்ட இலங்கை அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கைதடியில் வைத்துக் கடத்தப்பட்ட ஹையஸ் வான் மீசாலையில் மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 08

கைதடியில் கடத்தப்பட்ட ஹையஸ் ரக வாகனம் மீசாலை வேம்பிராய் பொது மயானத்துக்கு அருகாமையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை அநாதரவான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

கைதடி மேற்கில் விற்பனைக்காக விடப்பட்டிருந்த ஹையஸ் வாகனத்தை கடந்த ஞாயிற்றுக் கிழமை பார்வையிட வந்த நபர்கள் அதனை ஓடிப் பார்ப்பதாகக் கூறிக் கடத்திச் சென்றுள்ளனர்.

அதனை அடுத்து வாகன உரிமையாளரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வாகனம் மீசாலை, வேம்பிராய் பொது மயானத்துக்கு அருகாமையில் இலக்கத் தகடுகள் அகற்றப்பட்டு, அநாதரவாகக் காணப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

வாகனத்தை கடத்திச் சென்றவர்கள் ஏதேனும் குற்றச்செயலில் ஈடுபட்டனரா என பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ரூபாய் மதிப்பு மேலும் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 08

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு மேலும் அதிகரித்துள்ளது.

அதன்படி நேற்று டொலருக்கு நிகரான ரூபாயின் கொள்விலை 315 ரூபாயாக பதிவாகியுள்ளது.

மேலும் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 335 ரூபாவாக பதிவாகியுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் அண்மைய நாட்களாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கணிசமாக அதிகரித்து வருகின்றது. (அ)



## நாளை...

பணிமனையில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஒன்றிணைந்த சந்திப்பிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்த தொழில்சங்க கூட்டமைப்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட 40 தொழில்சங்கங்கள் உள்ளன. இவர்கள், கடந்த வெள்ளிக்கிழமை அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கணவர்...

சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த சிவபாதசுந்தரம் கௌசிகன் (வயது-42) வீட்டின் விறாந்தை பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டார். அவரது மனைவியான கௌ.வரதராயினி (வயது-36), இரு பிள்ளைகளான மைத்ரா (வயது-9), கேசரா (வயது-3) ஆகியோர் உறங்கியபடியும் சடலமாக மீட்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவரும் வவுனியா பொலிஸார் மீட்கப்பட்ட சடலங்களை சட்டவைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## நாணய...

தமக்கு கிடைக்கப் பெற்றதாகவும், அது தொடர்பில், மத்திய வங் கியின் ஆளுநருடன் கலந் துரையாடி அதனை சர்வ தேச நாணய நிதியத் துக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது கூறினார்.

மேலும், "பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறுவதற்கு கடந்த ஆண்டு மார்ச்சில் தீர்மானிக்கப்பட்டது. இதனடிப்படையில், அனைத்து இரு தரப்பு கடன் வழங்குநர்களும் நிதியியல் உறுதிபாடுகளை வழங்கியுள்ளனர். இதற்கமைய, இந்த மாதத்தின் 3 அல்லது 4 ஆவது வாரத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்க பெறும் என்று நம்புகிறேன்.

நாடு பெற்றுக்கொண்ட இரு தரப்பு கடன்கள் தற்போது செலுத்தப்படுவதில்லை. பலதரப்பு மற்றும் வணிகக் கடன்கள் மாத்திரமே மீள செலுத்தப் படுகின்றன.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் முறியுமாயின் வெளிநாடு மற்றும் தனியார் வங்கிகளில் பெற்ற கடனை செலுத்த வேண்டி ஏற்படும். அது கடந்த 7 முதல் 8 மாதங்களுக்கு முன்னர் எதிர்கொண்ட நிலைமையை விடக் கடினமானதாக அமையும்.

வரிச்சுமை அதிகரித்துள்ளதாக தொழில் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். எனினும், குறுகிய காலத்துக்கு இதனை தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும். இந்த நிலைமையை மக்களும் தொழில்சங்கங்களும் புரிந்துகொள்ள வேண்டும். இதனை புறக்கணித்தால் தற்போதையதைவிட நிலைமை மிகவும் மோசமாகும்.

கருத்து சுதந்திரத்துக்கு மதிப்பளிப்பதுடன் அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கும் இடமளிக்கப்படும். ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் மூலம் இந்த நடவடிக்கையை குழப்ப நினைப்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் ஜனாதிபதி எச்சரித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி கூறியவாறு எதிர்வரும் 20ஆம் திகதி இலங்கையை பிணை எடுப்பதற்கான பணியாளர் நிலை ஒப்பந்தத்தை சர்வதேச நாணய நிதியத்தின் சபை பரிசீலனைக்கு எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாடுகளுக்கு...

உறுதிப்படுத்தப்பட்டது.

இதனிடையே, கடந்த இரண்டு வாரங் களில் அங்குள்ள பட்டி ஒன்றில் 8 மாடுகள் இறந்தன என்று தெரிவிக்கப்பட்டது. அம்மை நோய் பரவலை கட்டுப்படுத்த உதவுமாறு பண்ணையாளர் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் அப்பகுதிக்கு பொறுப்பான கால்நடை மருத்துவ அதிகாரி எஸ். சுகிர்தன் சிகிச்சைகளை ஆரம்பித்துள்ளார். (ஐ-02)

## தேர்தல்...

யும் என கேட்கிறோம் என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று கேள்வி நேரத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையான உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் பதவிக் காலம் இவ்வருடம் மார்ச் மாதத்துடன் நிறைவடையவுள்ள போதிலும்,தற்போதைய அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை மூடி மறைக்க அரசாங்கம் தொடர்ந்தும் தேர்தலை ஒத்திவைக்க கடுமையாக முயற்சித்து வருகின்றது, தேர்தலை நடத்தாமல் தடுக்க இதுவரை சுமார் 22 விதமான கூட்டு சதிகளை அரசாங்கம் கையாண்டுள்ளதாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்த நிலையில்,தேர்தலை நடத்துவதற்கு நிதியை வழங்காமல் இருப்பது தான் அரசாங்கத்தின் கடைசி முயற்சியாக தெரிவதோடு,இது ஜனநாயகத்தை நசுக்கும் விடயமாகவும் அமைந்துள்ளது.

அத்துடன் நிதி அமைச்சின் செயலாளரை கலந்துரையாடுவதற்கு தேர்தல் ஆணைக்குழு இன்று (நேற்று) காலை அழைத்திருந்தது. ஆனால் தேசிய பாதுகாப்பு பேரவையில் சந்திப்பொன்று இருப்பதாக தெரிவித்து, தேர்தல் ஆணைக்குழுவுடனான கலந்தரையாடலை புறக்கணித்திருக்கிறார்.

அவ்வாறானதொரு பாதுகாப்பு பேரவை கூட்டம் இடம்பெற்றதாக தெரியவில்லை. ஏனெனில் ஜனாதிபதி, பிரதமர். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் என அனைவரும் சபையில் இருக்கும்போது எவ்வாறு தேசிய பாதுகாப்பு பேரவை கூட்டம் நடத்துவது.

நிதி அமைச்சின் செயலாளரை தேர்தல் ஆணைக்குழுவுடனான கலந்தரையாடலுக்கு அனுப்பாமல் தடுப்பதற்கே தேசிய பாதுகாப்பு பேரவை கூட்டம் இடம்பெறுவதாக பொய் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றார்.

இதன்போது சபையில் இருந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, காலையில் தேசிய பாதுகாப்பு பேரவையின் கூட்டம் இடம்பெற்றது. அந்த கூட்டத்தில் இருந்துவிட்டே ஜனாதிபதி சபைக்கு வந்தார். சபையில் அவரது விசேட உரை முடிந்தவுடன் மீண்டும் அந்த கூட்டத்தில் கலந்துகொள்ள செல்கிறார். ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் என்றவகையில் அந்த கூட்டத்திலும் கலந்துகொள்ளவேண்டி இருக்கிறது. அதேபோன்று நிதி அமைச்சர் என்ற வகையில் பாராளுமன்றத்துக்கும் வர வேண்டிய நிலை இருக்கிறது. அதன் பிரகாரமே ஜனாதிபதி செயற்பட்டார்.

அத்துடன் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் தேசிய பாதுகாப்பு பேரவையின் கூட்டம் இடம்பெறுகிறது. இது எதிர்க்கட்சித் தலைவருக்கும் தெரியும். அதனால் நிதி அமைச்சின் செயலாளர் இன்று தேர்தல் ஆணைக்குழுவுடன் கலந்துரையாட செல்லாவிட்டாலும் நாளை (இன்று) தேர்தல் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடுவார் - என்றார். (ஐ)

# ஐ. எம். எவ். மீதான எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மார்ச் 08

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்த தீர்மானங்கள் வெற்றி பெற்றதையிட்டு எதிர்தரப்பினர் கலக்கமடைந்துள்ளார்கள். சர்வதேச நாணய நிதியத்தை முன்னிலைப்படுத்தி எதிர்தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. குறுகிய அரசியல் நோக்கத்திற்காக செயற்படும் எதிர்தரப்பினரின் நிலை கண்டு கவலையடைகிறோம் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் குறிப்பிட்ட விடயங்களுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு இம்மாத காலத்திற்குள் கிடைக்கப்பெறும். நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை தொடர்ந்து அடுத்தக்கட்ட பொருளாதார முகாமைத்துவத்தை மேற்கொள்ள அரசாங்கம் விசேட திட்டங்களை வகுத்துள்ளது. நாட்டின் தற்போதைய நிதி நிலைமை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசியல் செய்வதற்கு தொனிப் பொருள் ஒன்று இல்லாத காரணத்தினால் எதிர்க்கட்சியினர் சர்வதேச நாணய நிதியத்து டனான பேச்சுவார்த்தை விவகாரத்தை தமது அரசியல் தேவைக்காக பயன்படுத்தி பொய்யான விடயங்களை சமூகமயப்படுத்திக் கொள்கிறார்கள்.

குறுகிய அரசியல் நோக்கத்திற்காக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் பொய்யான குற்றச்சாட்டுக்களையிட்டு கவலையடைகிறோம் - என்றார். (ஐ)

## பல்கலை...

போராட்டத்தையே பொலிஸார் இவ்வாறு கலைத்தனர்.

நேற்றைய தினம் கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான மாணவர்களின் போராட்டம் தும்முல்லை சந்தியை அடையும் முன்பாக பொலிஸாரால் தடுக்கப்பட்டு, கலைக்கப்பட்டது.

இதேநேரம் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடம் அருகே ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் சுற்றிவளைத்திருந்தனர் என்றும் அறிய வந்தது.

இதேவேளை, நேற்றைய தினம் பல்கலைக்கழக மாணவர்களின் பேரணி கொழும்பின் பல இடங்களிலும் நுழைவதற்கு நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கைக்கு...

பில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்ட அறிக்கையில்,

"இலங்கை இப்போது அனைத்து முக்கிய இரு தரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்தும் நிதி உறுதிமொழிகளை பெற்றுள்ளது. விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் நிதியளிப்பதற்காக 2022 செப்ரெம்பர் 1 அன்று எட்டப்பட்ட பணியாளர் நிலை ஒப்பந்தத்தின் ஒப்புதலை மார்ச் 20ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் சபை பரிசீலிக்க இது வழி வகுக்கிறது.

சபையின் ஒப்புதல், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட மற்ற கடன் வழங்குநர்களிடமிருந்து நிதியுதவியை ஊக்குவிக்கும். இந்த ஏற்பாடு இலங்கை ஏற்கனவே, மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்களுக்கான அதிகாரிகளின் வேலைத் திட்டத்தை ஆதரிக்கும். இது இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டு வலுவான வளர்ச்சி பாதையை அமைக்க உதவும் - என்றுள்ளது. (ஐ)

## பெண்ணுக்கு...

திகதி ஆட்டிறைச்சி சாப்பிட்டுள்ளார். ஆட்டிறைச்சியின் எலும்பு தொண்டைக்குள் சிக்கியுள்ளது. இதனால் அவர் வாழைப்பழம் சாப்பிட்டுள்ளார். எலும்பு மார்பு பகுதிவரை இறங்கி சிக்கியது.

மறுநாள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெறுவதற்காக சென்றுள்ளார். அவருக்கு வாய் வழியாக கமெராவை செலுத்தி ஆராய மருத்துவர்கள் முற்பட்டுள்ளனர். ஆனால், இதற்கு உடன்பட அந்த பெண் மறுத்து வீட்டுக்கு சென்றுள்ளார் என்று தெரிய வருகிறது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அந்தப் பெண் இரத்த வாந்தி எடுத்து துள்ளார். இதையடுத்து உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனளிக்காமல் அவர் உயிரிழந்தார்.

இறப்பின் பின்னர், கமெரா மூலம் பார்த்தபொழுது ஆட்டிறைச்சி எலும்பு குருதிக் குழாயில் குத்தியதாலேயே இரத்த வாந்தி ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டது என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் நேற்று நடத்தினார். (ஐ)

## ஏப்ரல் 25...

உள்ளூராட்சி தேர்தல் நடைபெறுவதாக இருந்தது. ஆனால், நிதி இன்மையால் தேர்தலை நடத்த முடியாதுள்ளது என்றும் அதனை ஒத்திவைப்பதாகவும் கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது.

இந்த நிலையில், தேர்தலுக்கான நிதியை விடுவிக்க திறைசேரிக்கு உத்தரவிடுமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்த வழக்கு கடந்த 3ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதில், தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை தடுத்து வைப்பதை தடுக்கும் இடைக்கால உத்தரவை உயர்நீதிமன்று பிறப்பித்தது.

இதைத் தொடர்ந்து இந்த வாரத்தில் தேர்தலுக்கான புதிய திகதியை நிதி அமைச்சு, அரச அச்சகம், பொலிஸ் மற்றும் பிற அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் அறிவிப்பதாக தேர்தல் திணைக்களம் அறிவித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரச...

நிறுவனங்களை விற்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாம் பேச்சுகளுக்கு தயாராக இருக்கிறோம். எல்லாவற்றையும் வெளிப்படையான முறையில் செய்வோம். சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒப்புதல் கிடைத்த பிறகு பங்குகளை திரும்பப் பெறும் செயல்முறையை தொடங்குவோம் என்றும் அந்த அதிகாரிகள் கூறினர்.

சிறீ லங்கன் எயார் லைன்ஸ் மீது இந்திய தனியார் நிறுவனம் ஒன்று ஆர்வமாக உள்ளது. இதேநேரத்தில், கட்டார் நாட்டின் நிறுவனம் ஒன்று ஹோட்டல் போன்ற சொத்துகளில் ஆர்வமாக உள்ளது என்றும் தெரி விக்கப்பட்டது.

இதனிடையே, மக்கள் மீதான சுமையை குறைப்பதற்கு அரசாங்க துறைகள் மறுசீரமைப்பு செய்வது அவசியம் என்று ஜனாதிபதி ஏற்கனவே கூறியிருந்தமையும் கவனத்துக்குரியது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதியின் விசேட உரையை விவாதத்துக்கு உட்படுத்தவேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 08

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரையை விவாதத் துக்கு உட்படுத்த வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

**நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்து ரைக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

ஜனாதிபதியின் உரையை அடுத்த பாராளுமன்ற அமர்வில் முழுமையான விவாதத்துக்கு உட்படுத்துவதற்கு கால அவகாசத்தை சபாநாயகர் வழங்க வேண்டும்.

ஜனாதிபதியின் விசேட உரை தொடர்பில் இரண்டு தினங்கள் விவாதம் இடம்பெற வேண்டும். அதற்கான அவகாசத்தை சபாநாயகர் வழங்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் நான் கேள்வி எழுப்பும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கு பதிலளித்தால் சிறந்ததாக இருக்கும். இந்நாட்டின் பெரும்பாலான உள்ளூராட்சிமன்றங்களின் உறுப்பினர் பதவிகாலம் இந்த ஆண்டு மார்ச் மாதம் நிறைடையவுள்ளது.

தற்போதைய அரசாங்கம் தொடர்பில் மக்கள் கொண்டு இருக்கும் அதிருப்தி நிலைமை மறைப்பதற்காக அரசாங்கமானது தேர்தலை ஒத்திவைப்பதற்கு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

தேர்தலை நடத்தாமல் இருப்பதற்காக அரசாங்கமானது 22க்கும் மேற்பட்ட உபாயமார்க்கங்களை மேற்கொண்டுள்ளதாக ஊடகங்களினூடாக தெரியவந்துள்ளது.

அந்த முயற்சிகளில் இறுதி முயற்சியாகவே தேர்தலுக்கான பணத்தை வழங்காமல் இருப்பற்கு அரசாங்கம் முயற்சித்தது.

இது ஜனநாயகத்தை கேள்விக்கு உட்படுத்தும் செயற்பாடாகும்.

தேர்தல் திணைக்களத்தின் இன்று (நேற்று) காலை இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கேற்குமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

எனினும் அவர் அந்த கலந்துரையாடலில் பங்கேற்கவில்லை. தேசிய பாதுகாப்புச் சபையில் கலந்துரையாடல் ஒன்று இருப்பதாகக் கூறி அந்த கலந்துரையாடலுக்கு அவர் சென்றுள்ளார்.

அவ்வாறான கலந்துரையாடல் இன்று (நேற்று) இடம்பெறவில்லை.

ஏனெனில் ஜனாதிபதி இன்று பாராளுமன்றத்துக்கு வருகை தந்தார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் இருக்கும்போது தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் எவ்வாறு இடம் பெறும்?

தேசிய பாதுகாப்பு அமைச்சரும் பாராளுமன்றத்தில் இருக்கின்றார். பிரதமரும் பாராளுமன்றத்தில் இருக்கின்றார்.

தேசிய பாதுகாப்பு சபையின் கூட்டம் கனவில் இடம் பெற்றது என்றே இங்கு கருத வேண்டியுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளரை தேர்தல் திணைக்களத்துக்கு செல்லவிடாது தடுப்பதற்காகவே தேசிய பாதுகாப்பு சபை கூட்டம் கனவில் இடம்பெற்றுள்ளது.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் விடயத்தை தேசிய முக்கியத்துவமிக்க பிரச்சினையாக கருத்திற்கொள்ள வேண்டும்.

மார்ச் மாத இறுதிக்குள் இந்த நாட்டின் சகல உள்ளூராட்சிமன்றங்களின் பதவி காலமும் நிறைவடையுமா?

அந்த சந்தர்ப்பத்தில் பதவிகாலம் நிறைவடையாத உள்ளூராட்சிமன்றங்கள் இருக்கின்றனவா? அவை யாவை?

தற்போதைய உள்ளூராட்சிமன்றங்களின் பதவி காலம் நிறைவடையும் திகதி யாது? - என்றார்.

(அ)

# கூட்டத்தில் பங்கேற்கமுடியாதென அறிவித்த திறைசேரிச் செயலாளர்!

கொழும்பு, மார்ச் 08

நேற்று இடம்பெற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது என திறைசேரியின் செயலாளர் மகிந்த சிறிவர்தன ஆணைக்குழுவுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில், தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று கூடி ஆராய்ந்தது.

இதன்போது, உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படும் தினம், தேர்தலுக்கான நிதி மற்றும் வாக்குச்சீட்டு அச்சிடுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் பங்கேற்குமாறு திறைசேரியின் செயலாளர், அரச அச்சகர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

முன்னதாக தேர்தல் நடத்தப்படும் தினம் தொடர்பில் தீர்மானிப்பதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப் பினர்களுக்கு இடையிலான சந்திப்பு கடந்த 3ஆம் திகதி இடம்பெற்றது.

எனினும் அன்றைய தினம் இறுதித் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. (அ)

# வடக்கு-கிழக்கிலும் சுகாதாரத்துறை இன்று வேலை நிறுத்தப் போராட்டம்!

கொழும்பு, மார்ச் 08

நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்த சுகாதார தொழிற் சங்கங்கள் பாரிய வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளன.

இலங்கை முழுவதும் உள்ள 33 தொழிற்சங்கங்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

அதற்கமைய இன்று வடக்கு கிழக்கில் உள்ள சிறிலங்கா சுகாதார சேவைச் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து சுகயீன விடுமுறைப் போராட்டம் மேற்கொள்ளவுள்ளனர்.

அதேவேளை, இன்று நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளுக்கு முன்பாக ஊழியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வைத்தியசாலைகளில் சேவையாற்றும் வைத்தியர்கள் முதல் சிற்றூழியர்கள் வரையான 75 சேவைப் பிரிவுகளும் இணைந்து போராட்டம் மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளதால் மக்கள் வீணாண அலைச்சலைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இருப்பினும் போராட்டத்தின்போது, அவசர சிகிச்சைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சாதாரண தரப் பரீட்சை பிற்போடப்படக்கூடும்!

கொழும்பு, மார்ச் 08

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தாமதமடைவது காரணமாக,2022 கல்வி பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையை பிற்போடுவதற்கான சாத்தியமுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, சாதாரண தரப் பரீட்சைக்கான திகதியை எதிர்வரும் இரு வாரங்களுக்குள் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (அ)

# தேர்தல் வேண்டும்! மொட்டு மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 08

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பாரிய கூட்டங்களை நடத்தாதபோதிலும், கிராம மட்டத்தில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# மரண அறிவித்தல்

**அமரர்**

**சுப்பிரமணியம் கணேசலிங்கம்**

(அகில இலங்கை சமாதான நீதவான், ஒய்வுநிலை தபால் அதிபர், முன்னாள் தலைவர் - நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்)



**தோற்றம்** : 25.02.1959
**மறைவு** : 02.03.2023

யாழ். நெடுந்தீவு மத்தியைப் பிறப்பிடமாகவும் வவுனியா பெரிய தம்பனையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கணேசலிங்கம் J.P கடந்த 02.03.2023 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் – பொன்னம்மா தம்பதியரின் செல்வப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை – நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயாம்பிகையின் பாசமிகு கணவரும் அகிலன் (கனடா), தயாளன், மாறன் (கனடா), சாம்பவி (அமெரிக்கா), அனுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனுஷா (கனடா), ஜெமிலா, கீர்த்தனா (கனடா), வரதன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும். சபாநாயகி, தியாகலிங்கம் (நோர்வே), புண்ணியலிங்கம், கலாநாயகி, குலநாயகி, செந்தில்நாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அமிர்தாம்பிகை, மோகனதாஸ் (கனடா) காலஞ்சென்ற கோசலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காவியா, அக்ஷயா, சாகித்தியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இல. 43, பெரியதம்பனை, வவுனியா என்ற முகவரியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மதியம் 1.30 மணிக்கு பெரியதம்பனை கற்குழி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :
**புண்ணியலிங்கம் (சகோதரர்) - 77 640 8918**
**மாறன் (மகன்) - 0778893273.**
**தயாளன் (மகன்) - 0772055558.**
**அனுயன் (மகன்) - 0768886204.**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.